விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 04 திங்கட்கிழமை (20.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 245

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைத் தமிழர் நிலையில் இந்தியாவின் பங்கு என்ன?

### விளக்குகிறார் எஸ்.எம்.கிருஸ்ணா



(புதுடில்லி)

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களில் மறுவாழ்விற்காக இந்தியா ஒதுக்கிய நிதி தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா விளக்கமளித்துள்ளார்.

மாநிலங்கள் அவையில் அ.தி.மு.க. உறுப்பினர் மைத்ரேயன் எழுப்பிய கேள்விக்கு எழுத்துபூர்வமாக எஸ்.எம்.கிருஸ்ணா பதிலளிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது,

இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு, மீள்குடியேற்றத்திற்காக அந்நாட்டுக்கு 2009-10-ம் நிதியாண்டில் ரூ. 68.96 கோடி, 2010-11-ம் நிதியாண்டில் ரூ.93.86 கோடி, 2011-12ஆம் நிதியாண்டில் ரூபாய் 181.94 கோடி வழங்கப்பட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் அறுவர் ஆளும் கட்சிக்கு பல்டி

### ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தகவல்

(அநுராதபுரம்)

அநுராதபுர மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச சபைகளின் எதிர்க் கட்சித் தலைவர்கள் ஐ.தே.கவிலிருந்து விலகி, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்துள்ளனர்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இவர்கள் ஆளும் கட்சியுடன் இணைந்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திரஸ்பன பிரதேச சபையின் எதிர்க் கட் சித் தலைவரும் முன்னாள் தலைவருமான கே.பி.முனசிங்க, கஹடகஹகிலிய பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர். ஜே.திலகரத்ன, ரம்பேவ பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் ஆர்.எம்.சி.என்.சாலியரட்ன, கலென் பிந்துனுவெவ பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## சீஷெல்ஸ் ஜனாதிபதி கொழும்பு விஜயம்

(கொழும்பு)

ஆபிரிக்காவின் கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள சீஷெல்ஸ் (Seychelles) குடியரசின் ஜனாதிபதி ஜேம்ஸ் அலிக்ஸ் மிச்சேல் இன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஓகஸ்ட் 23ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

பூகோள திரைச் சீலையில் சிறிய நாடுகளின் பாத்திரம் எனும் தலைப்பில் சர்வதேச விவகாரங்களுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் அவர் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-11)

## 'தமிழீழம்' என்ற வார்த்தைக்கும் தடை விதிக்கத் தீர்மானம்

தமிழீழம் என்ற வார்த்தைப் பிரயோகம் இன நல்லிணக்கத்தை சீர்குலைத்து, பிரிவினையை தூண்டும் வகையில் பிரயோகிக்கப்படுவதனால் அச் சொல்லையும், அச் சொல்லைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளையும் முழுமையாக தடைசெய்வது குறித்து அரசு முடிவெடுத்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

## எமது வேட்பாளர்கள் பல்டி அடிக்கமாட்டார்கள் - ஜே.வி.பி

தமது கட்சியில் இருந்து எந்தவொரு வேட்பாளரும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவில்லையென மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வி.பி) தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க நேற்று அளித்த செவ்வியிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னரைப் போன்றே தேர்தல் காலங்களில் பொதுமக்களை ஏமாற்றும் நோக்கில் இவ்வாறு முழங்கி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அரசாங்கம் பாரியளவில் முழங்கிவருகிறது.

ஜே.வி.பியின் பல பிரதேச சபை உறுப்பினர்கள் அவர்களுடன் இணைந்து கொண்டதாக மக்களை ஏமாற்றும் வகையில் தகவல்களை வெளியிட்டு (19ஆம் பக்கம் பார்க்க)

## புத்தரின் புனித சின்னங்கள் இலங்கையை வந்தடைந்தன

(கொழும்பு)



இந்தியாவின் புராதன கபிலவஸ்துவான பீகார் மாநிலத்திலிருந்து புத்த பகவானின் புனித சின்னங்களானஎலும்புகள் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போது புத்தரின் சமாதியிலுள்ள புனித சின்னங்களான அவரது சிதைந்த எலும்புகளை தமது நாட்டுக்கு வழங்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கோரியிருந்தார்.

இதனையேற்று புத்தரின் எலும்புகளை இலங்கைக்கு வழங்க இந்தியா முடிபு செய்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழம் அழியவில்லை அது அங்குதான் உள்ளது! - கருணாரட்ண



தமிழீழம் அழியவில்லை.அது அங்குதான் உள்ளது. அது தற்போது இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது எனவும் இப்போதும் தமிழ் மக்கள் தமிழீழக் கனவோடுதான் இன்னமும் வாழ்கின்றனர் என புதிய இடதுசாரி முன்னணி யின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கான சுய உரிமையோடு ஒன்றி வாழலாம் என்றுதான் விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரனும் விருப்பப்பட்டார். ஆனால் சிங்கள இனவெறியர்கள் அதனை ஏற்கவில்லை.

வருங்காலங்களில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் இணைந்து வாழலாம் என்று தமிழ் மக்கள் எண்ணினால் வாழலாம்.

இல்லாவிட்டால் அவர்களுக்கான சுய உரிமை கொண்ட தேசத்தை உருவாக்கிக் கொள்ளலாம். தமிழ் (19ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடனான பேச்சுவார்த்தையில் தென்னாபிரிக்காவின் மத்தியஸ்த யோசனை பாராட்டுக்குரியது–சுரேஸ்

அரசியல் தீர்வுத் திட்ட பேச்சுவார்த்தைகள் குறித்த தென்னாபிரிக்காவின் முனைப்பு பாராட்டுக்குரியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க தென்னாபிரிக்கா இணக்கம் வெளியிட்டுள்ளது.

இந்த முயற்சி பாராட்டுக்குரியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களின் பின்னர் தென்னாபிரிக்காவின் இந்த முனைப்புக் குறித்து கவனம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த தென்னாபிரிக்க பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகளை [illegible]

## டெசோ தீர்மானங்களுக்கு தமிழக காங்கிரஸ் ஆதரவு

கடந்த 12-ம் திகதி சென்னையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் எங்களுக்கும் உடன்பாடு உண்டு என தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் நேற்று கொண்டாடப்பட்ட, மறைந்த காங்கிரஸ் தலைவர்கள் சத்தியமூர்த்தியின் 125 ஆவது பிறந்த நாள் மற்றும் ஜி.கே. மூப்பனாரின் 81 ஆவது பிறந்த நாள் விழாக்களில் கலந்து கொண்ட தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தலைமையில் இருவரது உருவப்படங்களுக்கும் மாலை அணிவித்து காங்கிரஸார் மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் ஞானதேசிகன் செய்தியாளர்களைச் சந்தித்தபோது கூறுகையில், டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் எங்களுக்கும் உடன்பாடு உண்டு.

இலங்கையில் தமிழர்களும் சம உரிமையுடன் வாழ்வது, இராணுவத்தைத் திரும்பப் பெறுதல் போன்ற நடவடிக்கையை நாங்களும் வலியுறுத்துகின்றோம்.

தமிழர்கள் வாழும் பகுதியில் புகையிரத பாதைகள் அமைக்கும் பணி மத்திய அரசு உதவியுடன் நடக்கிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### இலங்கையிலிருந்து வெளியேறும்

# அமெ. தூதுவர் பற்றீசியாவுக்கு தமிழர்கள் அமைப்பு பாராட்டு



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டெனீஸ் தனது பதவியில் இருந்து விரைவில் வெளியேறவுள்ளார்.

ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பினர் அவர் தமிழர்களுக்குச் செய்த பல உதவிகளையும் சில சமயங்களில் உதவி செய்யாத சந்தர்ப்பங்களையும் நினைவுபடுத்தி பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பின் பத்திரிகைத் தொடர்பாளர் தெரிவிக்கையில், நாம் அவரை வாழ்த்த வேண்டும் என்றார்.

கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் தன் பணியில் இருந்து வெளியேறும் சமயத்தில் அவரின் சில செயல்களை நினைவு கூர்ந்து கிளிங்டனுக்கு எழுதிய கடிதம் பற்றி ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு அவரை நன்றியுடன் நினைவு கூர பின்வரும் நான்கு விடயங்கள் உள்ளன. அவையாவன:

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு புட்டெனீஸ் அழுத்தம் கொடுத்தார்.

இந்த விடயத்தில் கொழும்பு அரசாங்கம் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.

2. தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் திரும்பப் பெறவேண்டும் என்று கொழும்பு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்திருந்தார்.

ஆனால் அரசாங்கத்தினர் இவரின் அழுத்தத்தை கவனிக்கவில்லை. இதனை அவர் மேற்கொண்ட ஓர் நேர்மையான முயற்சியாக நாம் கருதுகின்றோம்.

3. புட்டெனீஸ் வடக்கு மற்றும் கிழக்கின் தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்து அமெரிக்க நிதி நிவாரணப்பணிகளை மேற் கொண்டார்.

அவரின் இந்த செயற்பாடு அமெரிக்கா தமிழ் மக்களில் அக்கறை செலுத்துகிறது என்ற எண்ணத்தைவெளிப்படுத்தியது. இவரின் இந்தச் செயற்பாட்டிற்காக நாம் நன்றி செலுத்துகின்றோம் என்று ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

4. புட்டெனீஸ் அவர்களால் யாழ்ப்பாணத்திலொரு அமெரிக்க கலாசார மையம் மற்றும் நூலகம் திறக்கப்பட்டது.

எங்கள் நூலகங்கள் பல போரின்போது அழிக்கப்பட்டன. இன்னும் சில வேண்டும் என்றே அழிக்கப்பட்டன.

இவரின் இந்தச் செயற்பாடு உண்மையாகவேதமிழ்மக்களுக்கு உதவியாக இருந்தது.

அதேவேளை எமக்குப் பிடிக்காத சில விடயங்களையும் அவர் மேற்கொண்டிருந்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# பணத்துக்காகவே பெற்றோரும் சகோதரியும் படுகொலை!

## வெள்ளவத்தை கொலை விசாரணையில் பொலிஸ் தகவல்

வெள்ளவத்தை ராமகிருஷ்ணா டெரஸ் வீதியில் நேற்று முன்தினம் வீடொன்றில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டவர்களின் மகன் பிரஷான் குமாரசாமி கொட்டக்கலை வீட்டிற்கு வந்து சென்றதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் குழுக்கள் வெவ்வேறாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

வெள்ளவத்தை ராமகிருஷ்ணா டெரஸ் வீதியில் நேற்று முன்தினம் வீடொன்றில் இருந்து மீட்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஹட்டன் கொட்டகலையைச் சேர்ந்த 58 வயதான குமாரசாமி, அவரது மனைவி பூவதி மற்றும் அவர்களது 23 வயதுடைய மகள் அமிர்தபிரியா ஆகியோரே நேற்று முன்தினம் சட லங்களாக மீட்கப்பட்டனர்.

அவர்களது வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து,அவரது அயல் வீட்டார் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் அங்கு சோதனை மேற்கொண்டனர்.

இவர்கள் மூவரும் கொட்டகலையில் உள்ள அவர்களது வீட்டிலிருந்து அவர்களின் மூத்தமகன் பிரஷான் குமாரசாமி என்பவரால் கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

பின்னர் பிரஷான் மீண்டும் தனியாக கொட்டகலை வீட்டிற்கு திரும்பியதாகவும், வீட்டில் சிறிது நேரம் தங்கியிருந்துவிட்டு மீண்டும் வெளியேறியதாகவும் அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொட்டகலையில் உள்ள வீட்டை உடைத்து பொலிஸார் சோதனைகளை மேற் கொண்டுள்ளனர்.

அவர்களின் மகன் அங்கு மறைந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே வீடு உடைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, நுவரெலியா பொலிஸாரும், வெள்ளவத்தைப் பொலிஸாரும் முனைப்புடன் தமது விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ்அதிகாரிஅஜித்ரோகண குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை குடும்பத்தின் மூத்த மகனால் முன்னேஸ்வரம் செல்வதற்காக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்ததாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

எப்படி இருப்பினும்,கடந்த மூன்று தினங்களுக்கு முன்னரே அவர்கள் மரணமாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

நிதி ரீதியான முறுகல் காரணமாகவே இந்த மகனால் பெற்றோரும் சகோதரியும் படுகொலை செய்யப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ந-11)

# வேட்பாளர் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஈழவர் ஜனநாயக முன்னணியின் தலைமை வேட்பாளரும் அக்கட்சியின் தலைவருமான பிரபாவின் வீட்டின் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வான் சிறு சேதங்களுக்கு உள்ளாகி உள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாகவும் பிரபா தெரிவித்தார்.

தோல்வியின் விளிம்பில் உள்ள முன்னாள் முதலமைச்சரும் அவரின் அடியாட்களுமே இச்சம்பவத்திற்கு காரணமாக இருக்கலாம் என ஈழவர் ஜனநாயக முன்னணியின் தலைமை வேட்பாளரும் அக்கட்சியின் தலைவருமான பிரபா தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு முன்னாள் முதலமைச்சரினதும் அவர்களினது ஆதரவாளர்களினாலும் பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸிலும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களிடமும் பல்வேறு தடவைகள் முறையிட்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இங்கு ஜனநாயக ரீதியான, சுதந்திரமான தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தரவேண்டும். அவ்வாறான நிலை இல்லை என்றால் தேர்தலில் போட்டியிடுவது கேள்விக் குறியாகிவிடும் என்றார். (ந-11)

# தமிழக மீனவர்கள் மீது இலங். கடற்படை தாக்குதல்!

(சென்னை)

தமிழ்நாடு, நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே வெள்ளப்பள்ளத்திலிருந்து கடலுக்கு சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் அரிவாளால் வெட்டி காயப்படுத்தி விரட்டியடித்துள்ளனர். அம் மீனவர்களின் வலைகளை அறுத்தெறிந்துள்ளனர் என தமிழக மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்து தெரியவருவதாவது,

வெள்ளப்பள்ளத்தில் இருந்து சுமார் 60 பைபர் கிளாஸ் படகுகளில் நேற்று மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

கச்சதீவு அருகே அவர்களை வழிமறித்த இலங்கை கடற்படையினர் அரிவாளால் தாக்கி விரட்டியடித்துள்ளனர்.

மேலும் மீனவர்களின் படகுகளை சேதப்படுத்திய கடற்படையினர் அவர்களின் மீன்களையும் பறித்துச் சென்றனர்.

இதையடுத்து 10 படகுகளில் இருந்த மீனவர்கள் கரைக்குத் திரும்பினர். மற்றவர்களும் கரைக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்ப்பதாக அந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேபோல் இராமேஸ்வரம் மீனவர்களது வலைகளையும் இலங்கை கடற்படையினர் அறுத்தெறிந்ததாக புகார் தெரிவித்துள்ளனர். (ந-11)

# விமானப்படை வீரர் சடலமாக மீட்பு

(அம்பாறை)

அம்பாறை விமானப்படை முகாமைச் சேர்ந்த விமானப்படை வீரர் ஒருவர் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த விமானப் படை முகாமுக்கு நீர் விநியோகிக்கும் சிப்பாயே கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை விமானப் படை முகாமுக்கு அருகில் உள்ள கிணற்றிலிருந்து இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த விமானப் படை வீரர் காணாமல் போயிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறைப் பொலிஸார் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-11)


திருமண வாழ்த்துக்கள்



இன்று (20.08.2012)

திருமண பந்தத்தில் இணையும்

குகேந்திரன் – நளினி

தம்பதியினர் நூறாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறோம்.

நண்பர்கள்

(C-794)


# கடலில் மூழ்கி இளைஞன் பலி

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை கடற்பரப்பில் குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

16 வயதான இளைஞன் அலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் கடலில் இருந்து மீட்கப்பட்டு களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வெள்ளவத்தைப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ந-11)


## காந்தி நிலைய சிறுவர் இல்ல முகாமையாளரிற்கான விண்ணப்பம்

மேற்படி இல்லத்தில் பொறுப்புக்களை ஏற்று தலைமை தாங்கி நடத்தக் கூடிய க.பொ.த உயர்தரம் முழுமையாகச் சித்தியடைந்த ஆகக் குறைந்த வயது எல்லை 30ற்கு மேற்பட்ட ஆண்பாலாரிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

விண்ணப்ப முடிவு திகதி :- 30.08.2012

இவ் விண்ணப்பத்தினை பின்வரும் இம் முகவரிக்கு சுய விபரத்துடன் சகல சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் அனுப்பி வைக்கவும்.

தி. இராசநாயகம்
தலைவர்,
காந்தி நிலையச் சிறுவர் இல்லம்,
D8 உருத்திரபுரம்.

(C-796)


# ரஷ்யப் பிரஜைகள் நீர்கொழும்பில் மரணம்

நீர்கொழும்பு கடலில் நேற்றுக் காலை குளிப்பதற்காகச் சென்ற ரஷ்யப் பிரஜைகள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக நீர்கொழும்பு உல்லாசப் பயணத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரஷ்யப் பிரஜைகளான 54 வயதுடைய ஆண் ஒருவரும் 28 வயதுடைய பெண் ஒருவருமே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-11)

# கடற்கரையில் ஆணின் சடலம்

சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒரு ஆணின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கல்முனை கடற்கரைப் பிரதேசத்தில் கரையொதுங்கியுள்ளது.

கல்முனை ஐஸ் தொழிற்சாலைக்கு அருகில் கரையொதுங்கியுள்ள இச்சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

இச்சடலம் தற்போது கல்முனை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞானிகள்

ஒருவர் தனியாக கண்ணை மூடிக்கொண்டே ஒரு இடத்திலே உட்கார்ந்திருந்தார்.

அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா- தியானம் செய்து கொண்டிருக்கிறாரா என்று எப்படி கண்டு பிடிக்கிறது?

நமக்குத் தெரிந்த வரைக்கும்... ஒருவர் நித்திரையென்றால் தலையை அடிக்கடி சாய்ப்பார்... அதன்பின் நிமிருவார்.

"தியானம்" செய்பவராக இருந்தால் ஆடாமல் அசையாமல் அப்படியே இருப்பார்.

தூக்கத்திற்கும் தியானத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது.

ஒரு முட்டாள் தூங்கப் போனால் அவன் முட்டாளாகவே திரும்பி வருகிறான்.

அதே முட்டாள் தியானம் செய்யப் போனால், அவன் ஞானியாகத் திரும்பி வருகிறான். இப்படி பெரியவர்கள் சொல்கிறார்கள்.

அது இருக்கட்டும்... ஞானிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

இப்போது நாம் அழகான ஒரு ரோஜாப் பூவைப் பார்க்கிறோம்.

"ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது இது- என்று வியக்கிறோம்.

ஒரு ஞானி அதே ரோஜாப் பூவைப் பார்க்கிறான். அவரும் நினைக்கிறார்... "ஆகா! இது எவ்வளவு அழகாக இருக்கிறது என்று.

உலகப் பொருட்களை நாம் எப்படி ஐம்புலன்கள் மூலமாக உணர்வோமோ அப்படித்தான் அவர்களும் உணர்கிறார்கள். அதிலே ஒன்றும் வித்தியாசமில்லை.

அல்வா சாப்பிடுகிறோம்... அது நமக்கு மட்டும்தான் இனிக்கும்... ஞானிகளுக்கெல்லாம் கசக்கும்... என்றா சொல்லுவோம்? அப்படி இல்லை... அதிலே வித்தியாசம் இல்லை...

அதனால் ஞானிகளுக்கும் நமக்கும் என்னதான் வித்தியாசம்? அந்த வேறுபாடு எந்தக் கட்டத்திலே ஆரம்பமாகிறது? இப்போது அதைப் பார்ப்போம்.

இப்போது மறுபடியும் அந்த ரோஜாப் பூவிடம் போவோம். ஞானி அதைப் பார்க்கிறார்.

ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது என்று நினைக்கிறார். அதன்பின் அதையே நினைப்பதில்லை. அப்படியே போய் விடுவார் அல்லது இயற்கையின் ஆற்றலைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார். ஆனால், நாம் அப்படிச் செய்யமாட்டோம்.

நாம் என்ன செய்வோம் தெரியுமா? முதலிலே அந்த ரோஜாப் பூவை பார்ப்போம்.

அதை இரசிப்போம்; எவ்வளவு அழகாக இருக்கிறது என்று நினைப்போம். அதன்பின்னர் அந்த மலர் நமக்குத் தேவை என்று நினைப்போம்.

அதற்கு அடுத்த கட்டம்... அந்த மலர் இல்லாமல் நம்மால் வாழ முடியாது என்ற நிலைமைக்கு வந்து விடுவோம். உடனே அதை அடைவதற்கு முயற்சிப்போம்.

அதை அடைவதற்கு யாராவது தடையாக இருந்தால் அவர்கள் மேல் நமக்குக் கோபம் வந்து விடும். இதனால் புத்தியை இழந்து யாரிடம் எப்படி நடப்பது என்பதை மறந்து விடுவோம்.

நாம் புத்தியை இழப்போம். கடைசியிலே அழிவோம். இந்த நிலைமை நமக்கு வந்து விடக்கூடாது என்றால் என்ன செய்ய வேண்டும்?

நமக்குக் கெடுதல் செய்யக்கூடிய ஆசைகளை ஆரம்பத்திலே கிள்ளி எறிந்து விட வேண்டும். ஒரு விடயம் என்ன தெரியுமா? ஆரம்பத்திலே எந்த ஆசைக்கு முதலிலே வலுக்கிடையாது.

அதைப்பற்றி நாம் நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலு உண்டாகும். முதலில் இளம் தளிராக இருந்தது இப்போது பெரிய மரமாக வளர்ந்து விடுகிறது.

ஞானிகள் இந்த அளவுக்கு அதை வளர விடுவதில்லை. அதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு இளைஞன் கையிலே ஒரு குச்சியை வைத்துக் கொண்டு நடந்து போய்க் கொண்டிருந்தான். வேறு ஒரு வயதானவர் கையிலே ஒரு குச்சியை வைத்துக் கொண்டு நடந்து போகிறார். அது அவருக்கு ஊன்று கோல். அந்த ஊன்று கோல் இல்லையென்றால், அவரால் நடக்க முடியாது. அது தவறி கீழே விழுந்தால்; அவரும் விழுந்து விடுவார்.

ஆனால், அந்த இளைஞனுக்கு அப்படியில்லை. அவனுடைய கைத்தடியை யாராவது எடுத்துச் சென்றால், கூட அவன் கவலைப்படமாட்டான். அந்த இளைஞன் கைத்தடியை பயன்படுத்துவது மாதிரித்தான் ஞானிகள் உலகப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள்.

ஞானிகள் பொருட்களைத் துறக்கமாட்டார்கள். அவைகள் பேரிலே உள்ள பற்றுதலைத்தான் துறப்பார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வேறெந்த மாகாணத்திலும் காணப்படாத சட்டம் வடமாகாண கல்வித்துறையில் புகுத்தப்பட்டுள்ளது

## இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் வேறெந்த மாகாணங்களிலும் இல்லாத சட்டம் வடக்கு மாகாணத்தில் கல்வித்துறைக்குள் புகுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சமகாலத்தில் வட மாகாண ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிக்கான தீர்வினை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் உள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்திலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதில் பேசப்படும் விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசுவோம். இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த விடயங்கள் தொடர்பில் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் எமக்கு அதற்கான உரிமை உண்டு.

வடமாகாணத்தில் கல்வித்துறை சார்ந்தவர்கள் தன்னிச்சையாக செயற்படுகின்றனர்.

இலங்கையில் எந்த மாகாணத்திலும் இல்லாத சட்டங்கள் இங்கு நடைமுறையில் உள்ளது.

இங்குள்ள சில வலய, கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் தமது எல்லையை மீறி செயற்படுகின்றனர்.

வன்னியில் சேவைக் காலத்தை பூர்த்தி செய்த 104 ஆசிரியர்களின் இடமாற்ற விவகாரம் ஒருவழியாக மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறையிட்டு இடமாற்றம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இடமாற்றம் வழங்கப்பட்டாலும் அதிலும் பல இடர்பாடுகளை ஆசிரியர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதுதவிர ஆசிரியர்கள் பயணம்செய்யும் [illegible]ருந்து காலதாமதமாக வருகிறது என ஆசிரியர்கள் முறையிட்டால் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

மாறாக அதை நிறுத்துவதற்கே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மேலும் கஷ்ட, அதி கஷ்ட பிரதேச படிகள் நிறுத்தப்பட்டமை தொடர்பில் வடக்கு மாகாண சபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வாறு பல விடயங்கள் தொடர்பில் முறையிட்டும் இதுவரை வடக்கு மாகாண சபை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இங்கு பணிபுரியும் அதிபர்கள், ஆசிரியர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 90 |
| தக்காளி | 80 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 70 |
| கரட் | 100 | 100 | 160 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 80 |
| பாகற்காய் | 70 | 110 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | -- |
| பயற்றங்காய் | 70 | 80 | 50 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 70 |
| போஞ்சி | 110 | -- | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 90 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 90 | 90 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 20 | 20-22 |

# இராசி பலன்

20.08.2012

(ஆவணி 04, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

திருதியை மாலை 6.38 மணிவரை

உத்தரம் முன்னிரவு 7.32 மணிவரை

இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

சுபநேரம் 12.05-1.35 மணிவரை

**மேடம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், இலாப நோக்கத்துடன் பழகியவர்களை இனங் கண்டு கொள்வீர்கள்.

**இடபம்** கனவுகள் நனவாக பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும், புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** வளர்ச்சி அதிகரிக்க முழுமுதற் கடவுளை வழிபட வேண்டிய நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், ,யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம்.

**கடகம்** இனிய சம்பவங்கள் ஏற்படும் நாள், உடன் பிறப்புக்கள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முன் வருவர், வருமானம் அதிகரிக்கும், ஆதரவுக்கரம் நீட்டுபவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**சிங்கம்** சிவனை வழிபட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும், விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும்.

**கன்னி** அமைதி வந்து சேர ஆதிமூலத்தை வழிபட வேண்டிய நாள், தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** புதிய திட்டங்களை நிறைவேற்ற புகழ் பெற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** ஆலய வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்ப ஒற்றுமை பலப்படும், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**மகரம்** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடை க்கும், கைவிட்டுப் போனதாக நினைத்த பொருளொன்று மீண்டும் வந்து சேரலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, குறை சொல்பவர்கள்

**கும்பம்** கவலைகள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் கூடும், சில வேலைகள் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக இருக்கலாம்.

**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், மாலையில் ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் திலக் கருணாரட்ண ராஜினாமா

**தொடரும் சர்ச்சைகள்**

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து திலக் கருணாரட்ண கடந்த வெள்ளிக்கிழமை ராஜினாமாச் செய்துள்ளார்.

தனது ராஜினாமா கடிதத்தை நிதியமைச்சிடம் கையளித்துள்ளார்.

இதேவேளை இதுகுறித்து திலக் கருணாரட்ண தெரிவிக்கையில்,

சுயாதீனமாகக் கடமையாற்ற முடியாமையே பதவிவிலகக்காரணம்.

பங்குச் சந்தையை சீரழித்த சிலரினால் எனக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. பங்குச் சந்தையை சீர்குலைக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் தொடர்ந்தும் பதவி வகிப்பதில் அர்த்தமில்லை என்றார்.

கருணாரட்ண தன் மீதும், இந்த ஒழுங்குமுறை ஆணையத்தின் மீதும் அதீதமான அழுத்தங்கள் அதிகரிப்பதன் காரணமாகவே தான் பதவி விலகுவதாகவும் கருணாரட்ண கூறுகிறார்.

பங்குச் சந்தையில் முதலீடுகளைச் செய்யும் சில தீய சிந்தனையுள்ளவர்களும், அவர்களை ஆதரிப்பவர்களிடம் இருந்து தமக்கு அழுத்தம் வந்ததாகவும், இலங்கையின் நிதிச் சந்தையில் விரும்பத்தகாத பல விடயங்கள் நடைபெற்று வருவதாகவும், தெரிவிக்கும் கருணாரட்ண,

பங்குச் சந்தையில் நடைபெறும் சில முறைகேடுகள் குறித்து 4 மாதங்களுக்கு முன்னர் தாங்கள் விசாரிக்க ஆரம்பித்ததில் இருந்து இந்த அழுத்தங்கள் வருகின்றன எனவும் அவர் மேலும் கூறுகின்றார்.

இப்போது இந்த முறைகேடுகள் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையை அடைந்துள்ளதாகவும் தமது கௌரவத்தையும் கண்ணியத்தையும் காப்பாற்றிக் கொள்ளவும் பதவி விலகுவதாகவும் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது உரிய அதிகாரிகளின் கடமை எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

அப்பாவி முதலீட்டாளர்களை மயக்கும் முறைகேடான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு திலக் கருணாரட்ண உத்தரவிட்டிருந்தார்.



பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக திலக் கருணாரட்ணவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த டிசம்பர் மாதம் நியமித்திருந்தார்.

அவருக்கு முன் இப்பதவியில் இருந்த இந்திராணி சுகததாஸ, தனது கொள்கைகளை முன்னிறுத்துவதற்காக எனக் கூறி ராஜினாமாச் செய்தமை குறிப்பிடத் தக்து.

இறுக்கமான ஒழுங்குவிதிகள் காரணமாக பங்குச் சந்தை விலைகள் பாதிக்கப்படுவதாக தரகர்கள் முறைப்பாடு செய்திருந்த நிலையில், அவர் ராஜினாமாச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

**பங்குச் சந்தையின் பொறிமுறை மாபியாவிடம் கைமாறும் ஆபத்து**

பங்குச் சந்தையின் பொறிமுறை மாபியாக்களிடம் கைமாறும் ஆபத்தான சூழல் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் உண்மைத் தகவல்களை பொதுமக்களுக்கு கூறுவதில்லை என்று ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான கலாநிதி ஹர்ஷா டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பங்குச் சந்தையில் சில்லறை வியாபாரமே இடம்பெறுகின்றது என்றும் அரசாங்கத்தின் தோல்வியும் இயலாமையும் வெளிப்பட்டுள்ளது என்றும்

1991, 2003, 2009 இன் பிணைகளுக்கான திருத்தச் சட்டங்களின் பிரகாரம் பங்குச் சந்தையின் சூழலை முதலீட்டாளர்களின் நம்பகத் தன்மைக்கு முக்கியத்துவம் அளித்து செயற்பட வேண்டியது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கடமையாகும்.

ஆனால் இன்று இவ் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் எந்தளவுக்கு வெளிப்படைத் தன்மையுடன் உள்ளது என்பதை புதிதாகக் கூறவேண்டியதில்லை.

முதலீடுகளுக்கு பாதுகாப்பளிக்கும் வகையிலோ முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையிலோ பங்குச்சந்தை சூழல் இடம் பெறவில்லை.

பிணைகள் பரிவர்த்தனை ஒழுங்களை பாதுகாக்க முடியாமையானது அரசாங்கத்தின் பொருளாதார தோல்வியினை வெளிப்படுத்தியுள்ளது.

பங்குச் சந்தை என்பது நாட்டின் பொருளாதாரக் கேந்திர நிலையம். இதனை இழிவாகக் கையாள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆனால் இன்று சிறு குழுவினரால் பங்குச் சந்தையின் பொறிமுறை கையாளப்படுகின்றது.

முதலீடுகள் மற்றும் பங்குக் கொள்வனவுகள் ஒழுங்கு விதிகளை மீறிச் செயற்படுகின்றது.

இரண்டாம் நிலைச் சந்தையில் ஸ்திரத் தன்மை காணப்படாவிடில் மூலச் சந்தையில் முதலீடுகள் இடம் பெறாது. இது நிதிச் சந்தையின் பொதுவான விதி.

இவ்விதிகளை மீறி சுய தேவைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட சிலரினால் பங்குச் சந்தை கையாளப்படுகின்றமை மேலும் சிக்கல்களையே ஏற்படுத்தும் என்றார்.

# 4-வது சர்வதேச வர்த்தக கண்காட்சி ஜனவரி 18-20




சர்வதேச வர்த்தக கண்காட்சி நான்காவது வருடமாகவும், அடுத்த வருடம் ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் வட பகுதி சந்தையில் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாதிருந்த உற்பத்தியாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக துறையினருக்கு இந்த சர்வதேச வர்த்தக கண்காட்சி களமாக அமையும் என ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் துரிதகதியில் வளர்ச்சியடைந்து வரும் நவீன தொழில்நுட்பங்கள் புதிய கைத்தொழில்கள் போன்றவற்றை அறிந்து கொள்வதுடன் அதன் மூலம் அவற்றின் பலன்களை முற்றாக பெறமுடியும் எனவும் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ளதனால் அவர்களின் வர்த்தக நடவடிக்கைகள் குறித்த விபரங்களை பெறக்கூடியதாக இருக்கும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, யாழ்ப்பாண மக்களின் பின்னணியைக் கொண்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளையும் உள்ளடக்கியதாக விளங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர இலங்கையின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த நிர்மாணம், விவசாயம், உணவுப் பானங்கள் பொதியாக்கம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஆடை அணிகலன்கள், வாகனங்கள், விருந்தகங்கள், சுற்றுலா, நிதிச் சேவைகள், பாவனைப் பொருட்கள் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ளன.

இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கங்களின் சம்மேளனம், யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கம் என்பன இந்த யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஏற்பாடுகளுக்கு முக்கிய ஒத்துழைப்பை வழங்கவுள்ளன.

# இலங்கை வங்கி சென்னை கிளையில் அதிகரித்த லாபம்

இலங்கை வங்கியின் வெளிநாட்டுக் கிளைகள் மூலம் கிடைத்து வரும் இலாபம் அண்மைக் காலமாக அதிகத்துள்ளதாக வங்கி அறிக்கையிலிருந்து தெரியவந்துள்ளது.

குறிப்பாக அண்டைய நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் சென்னை இலங்கை வங்கி கிளையில் மாத்திரம் கடந்த ஆண்டில் கிடைத்த இலாபம் 43 சதவீதத்தால் அதிகரித்து 133 மில்லியன் இந்திய ரூபாய்களாக காணப்படும் அதேவேளை உரிய கிளையின் மூலதனம் 10 மில்லியன் டொலரிலிருந்து 25 மில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும் வங்கி அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அதேவேளை வங்கியின் மாலைதீவுக்கான கிளையின் கடந்த ஆண்டு இலாபம் இரு மடங்காகி உள்ளதாகவும் அதன் பெறுமானம் 109 மில்லியன் மாலைதீவு ரூபாய்களாகும் எனவும் இக் கிளையின் மூலதனம் கடந்த ஆண்டில் 150 மில்லியன் மாலே ரூபாய்களாக அபிவிருத்தி அடைந்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேபோல் இலங்கை வங்கி லண்டன் கிளையின் இலாபத்திலும் பாரிய முன்னேற்றம் காணப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## திசைகாட்டியின் புதிய நியமனம்

விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்டின் புதிய நிர்வாக இணை இயக்குநராக எ.பிரவீணா நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச விசா ஆலோசனைத் துறையில் மேற்படி நிறுவனம் இணைந்ததை அடுத்து இந் நியமனம் இடம்பெற்றிருப்பதாகவும் நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**சிறிலங்கா ரெலிகொம் வருமானம் ரூ.3.36 பில்.**

சிறிலங்காரெலிகொம், 2012 யூன் 30-ம் திகதி நிறைவடைந்த முதல் ஆறு மாத காலத்திற்கான குழும மற்றும் நிறுவனத்தின் நிதி அறிக்கைகளைவெளியிட்டுள்ளது.

அதன்படி குழும செயற்பாட்டு இலாபமாக ரூ.3.36 பில்லியன்களை 15 சதவீதம் வருடாந்த வளர்ச்சியுடன் பெற்றுள்ளது.

குழும வருமானம் ரூ.27.50 பில்லியனாக 11 சதவீத வருடா வருட வளர்ச்சியுடன் அதிகரித்துள்ளது.

**எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் வரிக்குப்பின் இலாபம் ரூ.335மில்.**

எக்ஸ்போ லங்கா ஹோல்டிங் நிறுவனமானது 2012/2013 நிதியாண்டின் முதலாவது காலாண்டில் ஒன்று திரட்டிய வரிக்குப் பின்னரான தேறிய இலாபமாக ரூ.335 மில்லியனையும், ஒன்று திரட்டிய வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக ரூ.461 மில்லியனையும் நிதிப் பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது.

**தேசிய சேமிப்பு வங்கிக்கு புதிய தலைவராக சிறிசேன**

தேசிய சேமிப்பு வங்கியின் புதிய தலைவரா சுனில் எஸ்.சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 13ஆம் திகதி இவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான இவர், 36 ஆண்டுகால முகாமைத்துவ அனுபவத்தைக் கொண்டவர்.



**வெள்ளிவிழாவில் ஹில்டன்**

ஹில்டன் கொழும்பு தமது 25-வது வருட பூர்த்தி நிகழ்வை விசேட சமையல் விருந்தளித்துக் கொண்டாடவுள்ளது.

உணவுப் பிரியர்கள் அனைவரையும் முதல் முறையாக இடம்பெறவிருக்கும் தமது விசேட சமையல் திருவிழாவிற்கு வருகைதந்து ஹோட்டலைச் சேர்ந்த ஏறத்தாழ 60 சமையல் நிபுணர்களின். கைவண்ணத்தில் உருவாகும் கண்களுக்கும் நாவுக்கும் விருந்தளிக்கும் சர்வதேச நாடுகளின் சமையல் வகைகளின் திருவிழா எதிர்வரும் 25-ம் திகதி இலங்கை வங்கி மாவத்தையில் இடம் பெறும் என ஹோட்டல் நிர்வாகம் அறிவித்துள்ளது

**தங்கத்தின் தேவை உலகில் சரிவு**

தங்கத்தின் தேவை கடந்த 2 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சரிவைச் சந்தித்துள்ளதாக உலக தங்கக் கவுன்சில் தெரிவித்துள்ளது.

அது வெளியிட்ட அறிக்கையில்,

உலகம் முழுவதும் தங்கத்தின் தேவை 2010-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் முதல் யூன் மாதம் வரை சுமார் 76 தொன் குறைந்துள்ளது. 990 தொன் தங்கம் மட்டுமே வாங்கப்பட்டது.

இந்தியா, சீனா போன்ற தங்கத்தை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடுகளின் மத்திய வங்கிகள் தங்கம் வாங்குவதைக் குறைத்ததே இதற்கு முக்கிய காரணம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 132.54 | 133.56 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 204.77 | 210.50 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.41 | 165.62 |
| சுவிஸ் பிராங் | 133.32 | 138.24 |
| கனேடிய டொலர் | 131.47 | 136.09 |
| அவுஸ்திரேலிய டொலர் | 136.17 | 141.25 |
| சிங்கப்பூர் டொலர் | 103.74 | 107.21 |
| ஜப்பான் யென் | 1.63 | 1.69 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.37 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.91 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒலிபரப்பு சேவை கோபுர வசதிகள் நெலும் கோபுரத்திற்கு மாற்றப்படும்

## தொ.தொ.ஆணைக்குழு பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்புமாவட்டத்தில்உள்ள159வானொலி தொலைக்காட்சி மற்றும் தொலைபேசி கோபுரங்கள் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு இறுதியில் செயலிழக்கச் செய்யப்படும் என்று தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பணிப்பாளர் அனுஸ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதில் 43 வானொலி, 23 தொலைக்காட்சி, 50 தொலைபேசி கோபுரங்கள் அடங்குகின்றன. தற்போது அவ்வாறான 5 ஆயிரம் கோபுரங்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ளன.

இதன்காரணமாக சில வானொலி சேவைகளில் இடையூறுகள் ஏற்படுகின்றன.

இந்நிலையில் அனைத்து ஒலிபரப்பு சேவை கோபுர வசதிகளும் கொழும்பு விஜயவர்த்தன மாவத்தையில் அமைக்கப்படவுள்ள நெலும் கோபுரத்திற்கு மாற்றப்படவுள்ளன.

இந்தக் கோபுரம் சீனாவின் 104 மில்லியன் டொலர்கள் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளது. இதன் நிர்மாணம் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நிறைவடையும் என்றார். (அ-2)

# கணனி வன்பொருள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் (Computer Hardware) பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மாவட்ட முகாமையாளர் கே. கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரி க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயது தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி,பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணனி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (அ-9)

# வைரவப் புளியங்குள பகுதியில் இளைஞர் குழுவின் அட்டகாசம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் இடம்பெற்று வரும் இளைஞர்களுக்கிடையிலான மோதல் சம்பவங்களால் வீதியில் பயணிப்பதில் அச்சமான நிலை காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள சந்திகளில் கூட்டம் கூட்டமாக மாலை வேளையில் நிற்கும் இளைஞர்கள் தனியார் கல்வி நிலையங்களில் இருந்து வரும் பெண்களுடன் தகாதவார்த்தைப் பிரயோகம் மேற்கொள்வதாகவும் இதன் காரணமாக இளைஞர்களுடன் பெற்றோர் முரண்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சில இளைஞர் குழுக்கள் மது போதையில் நிற்பதாகவும் இவ்வாறான நிலை விடுமுறை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் உள்ளதென கூறும் அப்பகுதி மக்கள் வேறு கிராமங்களில் இருந்து வரும் இளைஞர் குழுக்களுடன் சில வேளைகளில் மோதல்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வீதியின் நடுவில் நின்று சில இளைஞர்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதாகவும் இது தொடர்பில் எவராவது கேள்வி கேட்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுடன் முரண்பட்டு தாக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொண்டு வீதியில் நிற்கும் இளைஞர்களை கட்டுப்படுத்தி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதை தடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தனர். (அ-9-266)

# கமநல சேவைகள் அமைச்சின் வளங்கள் தேர்தல் பிரசாரத்தில்

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கமநல சேவைகள் அமைச்சுக்குச் சொந்தமான வளங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக கபே இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தலைமையில் அநுராதபுரம் மாவட்டத்தில் உலருணவு வழங்குதல், மண்வெட்டி, மோட்டர் பம்பிகள் வழங்குதல் என்பன இடம்பெற்று வருவதாக அறியக்கிடைக்கின்றது.

இவ்வாறான திட்டங்களுக்கு விவசாய நிதியத்தில் இருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையை கட்டுப்படுத்த தேர்தல்கள் செயலகம் தலையிட வேண்டும் என கபே இயக்கம் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது. (அ-2)

# பாபாவின் படத்திலிருந்து விபூதி சொரிகிறது

## காரைதீவில் அதிசயம்



காரைதீவிலுள்ள வீடொன்றில் பகவான் சத்திய சாயிபாபாவின் படத்திலிருந்து விபூதி சொரிகிறது.

காரைதீவு 7 ஆம் குறிச்சியிலுள்ள வீடொன்றில் சாமியறையில் சாயிபடம் மற்றும் அருகிலுள்ள ஏனைய சுவாமி படங்கள் வைக்கப்பட்ட இடத்திலேயே இவ்வற்புத நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த அதிசயமானது கடந்த கதிர்காமக் கந்தன் கொடியேற்ற தினமான ஜூலை 18 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து தற்போது ஒரு மாதம் தொடர்ந்து நடந்து வருவதாக கூறப்படுகின்றது.

மேலும் அவர்களுக்கு கனவில் பிரசன்னமாகி தனக்கு உணவு பரிமாறுமாறு பகவான் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக தினமும் உணவும் பாலும் சாயிபாபா படத்தின் முன்னால் நிவேதனமாக படைக்கப்படுகின்றது.

இவ்வாறு நிவேதனம் வைத்து அரைமணி நேரத்தினுள் அரைவாசி பகுதி முடிந்துவிடும். அவ்வாறான அற்புதமும் நடக்கிறது. இவ்வதிசயத்தை கண்டு தரிசிப்பதற்காக தினமும் பெருமளவான மக்கள் படையெடுக்கின்றனர். (அ-2)

# குழந்தைக்கு எமனான நிலக்கடலைக்கோது

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தின் கருவலகவெவ பகுதியில் பதினொரு மாதம் நிரம்பிய குழந்தையொன்று நிலக்கடலையின் கோது தொண்டையில் சிக்கியதன் காரணமாக உயிரிழந்துள்ளது.

கவிசா அனுபாமா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. தொண்டையில் நிலக்கடலையின் கோது சிக்கியதன் காரணமாக தபோவ வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்ட இக்குழந்தை ஆபத்தான நிலையில் புத்தளம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது. பிரேத பரிசோதனை நேற்றைய தினம் நடைபெற்று சடலம் பெற்றோரிடம் வழங்கப்பட்டது. (அ-2)


மணமகள் தேவை கல்யாண மாலை மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சித்திரை 1<br>உயரம்:-5'3"<br>கி.பா:-24.5<br>தொழில்:-தபால் சேவகர்<br>B/313 | பிறப்பு:- 1964 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரட்டாதி 1<br>உயரம்: 5'4"<br>கி.பா:-73, 7 இல் செவ்<br>தொழில்:- விஞ்ஞான ஆசிரியை<br>G/028 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கார்த்திகை 3<br>உயரம்:-5'8"<br>கி.பா:-78.25, 1 இல் செவ்<br>தொழில்:-கனடா (P.R)<br>B/315 | பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரம்4<br>உயரம்: 5'2"<br>கி.பா:-19.75<br>தொழில்:- G.C.E. A/L<br>G/314 |
| பிறப்பு:- 1974 இந்து<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி 3<br>உயரம்:-5'5"<br>கி.பா:-14, 2 இல் செவ்<br>தொழில்:-சொந்த நகைக் கடை<br>B/319 | பிறப்பு:- 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தராடம்<br>உயரம்: 5'3'<br>கி.பா:- 42, 4 இல் செவ்<br>தொழில்:-<br>G/027 |
| பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூரம் 3<br>உயரம்:-5'9"<br>கி.பா:-77, 8 இல் செவ்<br>தொழில்:- லண்டன் ஸ்ருடன் விசா<br>B/316 | பிறப்பு:- 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 3<br>உயரம்: 5'4"<br>கி.பா:-54.5, 7 இல் செவ்<br>தொழில்:-அரச ஆசிரியை<br>(எழுத்தெழுதி விவாகரத்தானவர்) G/035 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாயத்தின் பேரிலான மதமாற்றத்தை தடுப்பதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும்

## இந்து மகாசபையின் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டாயத்தின் பேரில் மதமாற்றத்தில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்த மதமாற்ற தடைச் சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என இந்து மகாசபையின் தலைவரும் வைத் திய கலாநிதியுமான இ.சிவசங்கர் தெரிவித்துள்ளார்

இந்து சமயம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இந்து சமயப் பேரவை மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் குறிப்பாக இந்துக்களை மதமாற்றும் நடவடிக்கைகள் தற்போது வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனைக் கட்டுப்படுத்த இந்து அமைப்புக்கள் முன்வர வேண்டும். எதிர்காலத்தில் பாரிய சவாலை இந்துசமயம் எதிர்நோக்கவுள்ளது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

அத்தோடு கட்டாயத்தின் பேரில் வறுமையை சாதகமாக பயன்படுத்தி மதமாற்றம் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்த மதமாற்ற தடைச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

ஆயுதப் பின்னணியிலும் பணப் பின்னணியிலும் மதமாற்றம் வலுக்கட்டாயமாக இடம்பெறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இதேவேளை மதமாற்றத்தை சட்டத்தினால் தடுக்க முடியாது என சட்டத்தரணி கு.குருபரன் தெரிவித்தார்.

மதம் என்பது நம்பிக்கையுடன் தொடர்புடையது. பணத்தினைப் பெற்றுக் கொண்டு மதம் மாறுவதால் அந்த மதத்தினை சார்ந்தவராக மாறிவிட முடியாது.

அத்தோடு எந்த மதமும் தமது மதம் சார்ந்தவர்களின் எண்ணிக்கையை கூட்ட வேண்டும் எனக் கூறவில்லை. அவ்வாறு இருக்கையில் ஏன் இன்னொரு மதத்தவரை தமது மதத்திற்கு மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

அத்தோடு இந்துசமய அமைப்புக்கள் மதமாற்றத்தில் ஈடுபடுபவர்களைத் தடுப்பதற்கு எடுக்கும் முயற்சிகளை விடுத்து மதம் மாறுபவர்களின் தேவைகளைக் கண்டறிந்து உதவிகள் செய்வதன் மூலம் மதமாற்றத்தை கட்டுப்படுத்த முடியும்.

இந்துமதம் சார்ந்த தலைவர்கள் சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் பூச்சியத்தில்தான் உள்ளது.

எனவே மதமாற்றத்தை சட்டத்தால் ஒரு போதும் தடுக்க முடியாது. அவ்வாறு தடுக்க எடுக்கும் முயற்சிகள் தோல்வியில்தான் முடியும் எனவும் இந்து சமயப் பெரியார்கள் சமயப் பணியுடன் சமூகப்பணியையும் முன்னெடுக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ-6)




## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு மிருகயாத்திரை உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக தர்மகர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (அ-9)

# நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 29 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்

## பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலத்திற்குள் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் 36 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமான மது விற்பனை தொடர்பாக 5 வழக்குகளும் கஞ்சா விற்பனை தொடர்பில் ஒரு வழக்கும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்திற்காக 7 வழக்குகளும் பொது இடத்தில் மதுபாவனை தொடர்பாக 7 வழக்குகளும் சூழல் மாசடைவை ஏற்படுத்தியமை தொடர்பாக 11 வழக்குகளும் ஏனைய குற்றங்களுக்காக 5 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இதேவேளை, யாழ்ப்பாணம், ஊரெழு, பொக்கணை ஆகிய பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி வட்டக்கச்சியைச் சேர்ந்த முருகேசு சிவராசா (வயது 45) என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# குருக்கள் மாவடி பிரதேசத்தில் சில வீடுகளுக்கு மின்சாரமில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

(மிருசுவில்)

வடக்கு மிருசுவில் குருக்கள் மாவடி பிரதேசத்தில் உள்ள குறிப்பிட்ட சில வீடுகளுக்கு மின்சாரம் வழ்ங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

நவீனமயப்படுத்தப்பட்ட இக்காலத்தில் மின்சாரத்தின் ஊடாகவே எல்லாத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன.

குறிப்பாக இவ்வீடுகளில் புலமைப்பரிசில் பரீட்சை மாண வர்கள், க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் குப்பி விளக்கி லேயே பரீட்சைக்கு தம்மை தயார் செய்ய வேண்டியுள்ளது.

அருகில் உள்ள இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதும் குறிப்பிட்ட சில வீடுகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படாத காரணம் என்ன?

இப்பகுதி மக்கள் தமக்கு மின்சாரம் வழங்குமாறு பலதடவைகள் மின்சார சபையினரிடம் கோரிய போதும் சிலதினங்களில் தருவதாக தெரிவித்துள்ளனரே தவிர எவ்வித செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் வடக்கின் வசந்தத்திட்டத்தின் கீழ் மின்சாரம் தருவதாக கூறப்பட்ட போதும் இன்றுவரை வடக்கின் வசந்தம் இக்கிராமத்திற்கு வீசாமையால் மக்கள் இருளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

எனவே உரியதரப்பினர் மேற்குறித்த தமது அவலநிலையைப் போக்க மின்சாரத்தை வழங்க முன்வர வேண்டுமென அப்பகுதி மக்க்ள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-85)

# உணவகத்தில் வாய்த்தர்க்கம்; இளைஞர் இடையே மோதல்

(மிருசுவில்)

உணவக உரிமையாளருக்கும் உணவகத்திற்கு சென்ற இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் உணவு உரிமையாளரும் இளைஞர்களும் காயமடைந்துடன் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

கிளிநொச்சியில் இருந்து மாட்டு வண்டிச் சவாரிக்காக யாழ்ப்பாணத்திற்கு வந்த இளைஞர்கள் கொடிகாமம் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சென்று உணவு உண்டுகொண்டிருந்தனர். இதன்போது இவ்இளைஞர்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதனை நிறுத்த முற்பட்ட உணவக உரிமையாளருக்கும் இளைஞர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த கொடிகாமப் பொலிஸார் உணவக உரிமையாளர் மற்றும் இளைஞர்களை சராமாரியாக தாக்கியதுடன் அவர்களை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணை முடியும் வரை குறித்த உணவகம் திறக்கமுடியாது என பொலிஸார் சீல் வைத்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-3-85)



வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரகம் இணைந்து நடத்திய உன்னிகிருஷ்ணனின் இசைக்கச்சேரி நேற்று முன்தினம் யாழ். சங்கிலியன் தோப்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் பிரபல தென்னிந்திய கர்நாடக இசை வல்லுநர் ஸ்ரீ.பி.உன்னிகிருஷ்ணன், ரி.எம்.கிருஷ்ணா ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கப்படுவதையும் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களுடன் அமைச்சர், யாழ்ப்பாண இந்தியத் தூதுவர் மகாலிங்கம், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உள்ளிட்ட அதிகாரிகள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்

## 17.08.2012 - 16.09.2012



## துலாம்

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள் , சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டிய நேரம்!**

**தெய்வ பலத்தால் தினமும் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொல்லும் துலாம் இராசி நேயர்களே!**

எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை எப்பொழுதும் உங்கள் உள்ளத்தில் அலை பாய்ந்துகொண்டே இருக்கும். பக்கத்தில் இருப்பவர்களைப் பாராட்டிப் பேசியே காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். விதவிதமாக உடை உடுத்தவும், உணவு உண்ணவும் ஆசைப்படுவீர்கள்.

உங்களுக்கு இந்த ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இரண்டில் ராகு, எட்டில் கேது சஞ்சரிக்கிறார்கள். குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால், சங்கடங்களுக்கு மத்தியில் சந்தோஷங்களும் வந்து சேரும். செவ்வாய் பலம் பெற்றிருப்பதால் பணவரவிற்கு பஞ்சமில்லை என்றாலும், விரயங்களும் அதிகரிக்கும்.

விரயச்சனி ஜென்மச்சனியாக மாறுவதால், இனி விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால்தான் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். சனிக்கிழமை தோறும் சனிக் கவசம் பாடி சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அஷ்டமத்தில் குரு பலம் பெறுவதால், குரு வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். தென்முகக் கடவுளை தரிசனம் செய்தாலே நன்மைகள் வந்து சேரும். ராகு, கேதுக்குரிய சிறப்பு வழிபாடுகளை

# சங்கடங்களுக்கு மத்தியில் சந்தோஷங்கள் நிலவும் பணத்தேவைகளும் அவ்வப்போதே பூர்த்தியாகும்

மேற்கொண்டால், தடைகள் அகலும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி புதன் சிம்ம இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ற இலாபம் வந்து கொண்டேயிருக்கும். எனவே, புது முயற்சிகளை நீங்கள் செய்ய முன்வரும் பொழுது அதற்குரிய பணத் தொகை கைவசமில்லையே என்று கவலைப்படத் தேவையில்லை. காரியத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொழுதே, காசு பணத்திற்காக செய்யும் ஏற்பாடுகளும் கைகூடும். புதன் உங்கள் ராசிக்கு 9 க்கு அதிபதியாகவும் விளங்குவதால் செப்ரம்பர் 10 ஆம்திகதி கன்னி இராசியில் உச்சம் பெறும்பொழுது, பூர்வீக சொத்து விற்பனையால் ஒரு பெரும் தொகை கிடைக்கலாம். அல்லது வாங்கிய சொத்தை விற்பதன் மூலம் இலாபம் கிடைக்கும். அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும்.

**புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் நேரம்!**

ஆகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் பத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் ஒன்றிரண்டு முயற்சிகள் வெற்றி பெறலாம். அதே நேரத்தில் அஷ்டமாதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் நண்பர்களை நம்பி ஏமாறும் சூழ்நிலையும் உண்டு. திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் உருவாகலாம். வாகன பழுதுச் செலவுகள் ஏற்படுவதை தவிர்க்க புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ஜென்மச் சனியின் ஆதிக்கம் வருகிறது!**

இதுவரை விரயச்சனியின் ஆதிகத்தில் இருந்த உங்கள் இராசி இப்பொழுது ஜென்மச் சனியின் ஆதிக்கத்திற்கு மாறுகிறது. அதாவது, செப்ரம்பர் 12 ஆம் திகதி உங்கள் இராசிக்கு சனி செல்ல இருக்கிறார். எனவே, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். இருப்பினும் உச்சம் பெறும் சனி ஐந்திற்கு அதிபதியாவதால், பிள்ளைகள் வழியில் சுபச்செய்திகளைக் கொண்டு வந்து சேர்க்கும்.

இம்மாதம் அங்காரக வழிபாடும், அனுமன் வழிபாடும் தங்குதடைகளை அகற்றும். மாதத் தொடக்கத்தில் வருமானம் திருப்தி தரும். ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறப்போவதால், விரோதங்களை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அஷ்டமத்து கேதுவின் ஆதிக்கம், ஜென்மச்சனியின் ஆதிக்கம் இவை இருப்பதால் எதையும் செய்யத் தொடங்கும் முன், குடும்பப் பெரியவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு முடிவெடுப்பது நல்லது. அரசுத் துறையில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் மாறும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்!**

**மனதில் நினைத்ததை மறைக்காமல் சொல்லி மற்றவர்களின் மனதில் இடம்பிடிக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

நீங்கள் விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகவே விளங்குபவர்கள். வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவர் நீங்கள். இறைவனைப் பற்றிய சிந்தனை இருபத்தி நான்கு மணிநேரமும் உங்கள் இதயத்தில் இருக்கும். அரைகுறையாக எந்தப் பணியையும் விட்டுவிட உங்களுக்கு மனம் வராது. ஆற்றல் மிக்கவர்களை உங்களுக்கு பின்னணியாக வைத்துக்கொண்டிருப்பீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் மக்கள்

# வியக்கும் செய்திகள் ஏராளமாகவே வந்துசேரும் நடக்கும் தொழிலில் கிளைத்தொழில் தொடங்குவீர்கள்

மனதில் இடம்பிடித்து மாபெரும் பதவிகளை பெறுவதில்கூட வல்லவர்களாக விளங்குபவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் செவ்வாய் பன்னிர ண்டில் சஞ்சரித்து, தன் வீடாக விளங்கும் ஆறாம் இடத்தை பார்க்கிறார். எனவே, விபரீத ராஜ ஜோகம் செயற்படப்போகிறது. வியக்கும் செய்திகள் ஏராளமாக வந்து சேரும். வீடுதேடி புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டேயிருக்கும். திடீர் பண வரவுகள் தித்திக்க வைக்கும்.

மாதத் தொடக்கத்திலேயே செயல் ஸ்தானாதிபதி சூரியன் சொந்தவீட்டில் சஞ்சரிப்பதால் தொழிலில் மிகுந்த முன்னேற்றம் ஏற்படும். பங்குதாரர்கள் இலாபத்தைக்கொண்டு வந்து சேர்ப்பர். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் கூடும். ஏழரைச் சனி இம்மாதக் கடைசியில் தொடங்க இருக்கிறது. உங்கள் இராசியைப் பொறுத்த வரையில் வாழ்வில் நல்ல மாற்றங்களையும் வசதி வாய்ப்புக்களையும், வாகன யோகங்களையும் வழங்குவது ஏழரைச்சனிதான். இருப்பினும், அது எத்தனையாவது சுற்று என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதற்கேற்ப பரிகாரங்களையும் செய்து கொள்ளுங்கள். கருநிற காகம் ஏறி என்ற சனிக்கவசம் பாடினால் சந்தோஷங்களை மட்டும் சந்திக்கலாம். இராகு- கேதுக்களின் வழிபாடு யோகம் சேர்க்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி**

உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் ஆகஸ்ட் 24 ஆம் திகதி 10 ஆம் இடத்தில் செப்ரம்பர் 10 ஆம் திகதி இலாப ஸ்தானத்திலும் சஞ்சரிக்கப் போகிறார். இலாபாதிபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது இலாபம் இருமடங்காக வந்து சேரும். நடக்கும் தொழிலில் கிளைத் தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் உருவாகும். அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்துசேரும். ஆற்றல் மிக்கவர்களும், அரசியல்வாதிகளும் உங்களுக்கு பின்னணியாக இருந்து, சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் நடைபெற வழிவகுத்துக் கொடுப்பர்.

**சுகம் தரும் சுக்கிர பெயர்ச்சி**

சுக்கிரன் ஆகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். 7, 12 க்கு அதிபதி ஒன்பதில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். நூதன பொருட்சேர்க்கை உண்டு. பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பயணங்கள் அதிகரிக்கும். தூரத்து உறவினர்கள் ஒருவரின் அன்புக்கு பாத்திரமாகி அவர்கள் மூலம் தொழில் வளர்ச்சியை பெருக்கி கொள்வீர்கள்.

**உச்ச சனியின் ஆதிக்கம்**

செப்ரம்பர் 12 ஆம்திகதி உங்கள் இராசிக்கு பன்னிரண்டில் சனி உலா வரப்போகிறார். 3, 4க்கு அதிபதி பன்னிரெண்டாமிடத்தில் உச்சம் பெறப்போவதால் சுகபோகச் செலவுகள் அதிகரிக்கும். சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக்கிக் காட்டுவீர்கள். குருவின் சப்தம பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஏழரைச்சனி இனிய பலன்களையே உங்களுக்கு வழங்கும். பொருளாதார நிலை மேலோங்கும். ஒருபடி உயரும்.

இம்மாதம் ஆனைமுகப்பெருமான் வழிபாடும், சனீஸ்வரர் வழிபாடும், நந்தீஸ்வரர் வழிபாடும் நலன்களையும், வளங்களையும் கொடுக்கும். உடன்பிறப்புகள் வழியாக ஒத்துழைப்புக் கிடைக்கும் மாதமாக அமைகிறது. பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். பிள்ளைகளின் கல்வி மற்றும் கல்யாண வாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். வியாழன் தோறும் விரதமிருந்து குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு, சர்ப்ப சாந்தியும் செய்தால் தடைப்பட்ட காரியங்கள் தாமாகவே நடைபெறும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி.புகலிடக் கோரிக்கையாளர்களை தாய்நாட்டுக்கே திருப்பி அனுப்ப வேண்டும்

## ஆஸி. வருவோரை தடுக்க இதுவே வழி என்கிறார் கடற்படை பேச்சாளர்

(கொழும்பு)

**வேறு நாடுகளில் புகலிடக் கோரிக்கையாளர்களை தங்க வைப்பதன் மூலம் மட்டும் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புகலிடக் கோரிக்கையாளர்களை சட்ட விரோதமான முறையில் நாட்டிற்குள் பிரவேசிப்பதனை தடுக்கும் நோக்கில் அவுஸ்திரேலியா புதிய சட்டமொன்றை பாராளுமன்றில் நிறைவேற்றியுள்ளது.

இந்த சட்டத்தின் மூலம் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசிப்போர் வேறு நாடுகளில் தங்க வைக்கப்பட்டவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த நடவடிக்கையானது புகலிடக் கோரிக்கையாளர் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்கும் இலங்கையர்களை நாடு கடத்த வேண்டும்.

இவ்வாறு நாடு கடத்துவதன் மூலம் புகலிடக் கோரிக்கையாளர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காண முடியும்.

பப்புவா நியூகினியா தீவுகளில் அல்லது வேறு நாடுகளில் முகாம்களை அமைத்து புகலிடக் கோரிக்கையாளர்களை தங்க வைப்பதன் மூலம் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்பட முடியாது.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் உள்ள கிராமங்களை விடவும் சிறந்த நிலைமையும் வாழ்க்கைத் தரமும் பப்புவா நியூகினியாவில் காணப்படும் என்பதை மக்கள் அறிவார்கள்.

இதேவேளை, இவ்வாறு வேறு நாடுகளில் முகாம் அமைத்து புகலிடக் கோரிக்கையாளர்களை நீண்ட காலத்திற்கு தங்க வைப்பது சட்டவிரோதமானது என ஐக்கிய நாடுகள் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நிதியொதுக்கீடுகள்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

எனினும் எந்தளவு நிதியொதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை. மேலும் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சுக்களின் திட்டங்கள் கோரப்பட்டுள்ளன.

சில அமைச்சுக்கள் ஏற்கனவே ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளதாக ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். (அ-2)

# உரிய முறையில் செயற்படாத அமைச்சுக்களில் மாற்றம்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இல்ங்கையில் உரிய முறையில் கடமையாற்றாத அமைச்சுக்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்ட அமைச்சுகளில் இவ்வாறு மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களின் பின்னர் இந்த மாற்றம் செய்யப்படவுள்ளது.

அமைச்சர்களை மாற்றுமாறு பொதுமக்களும், தொழிற்சங்கங்களும் கோரிக்கை விடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்ச்சைகளில் சிக்கியுள்ள அமைச்சர்களுக்கு வேறு பொறுப்புக்களை வழங்கி வினைத்திறனாக செயற்படும் அமைச்சர்களுக்கு இந்தப் பதவிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# விளக்கமறியலில் வைக்கப்பட்ட 12 இலங்கையர்களுக்கு விடுதலை

கேரளா கொல்லம் பகுதியில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்ட 12 இலங்கை தமிழர்களும் நீதிமன்ற காவலில் இருந்து நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு குறித்த 12 பேரும் குற்றவாளிகள் இல்லை என்று அறிவித்துள்ளமையால் அவர்களை விடுவிக்கலாம் என்று அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும் இந்தியாவுக்கு வருவதற்கான உரிய ஆவணங்களை கொண்டிருக்காமையால் இவர்கள் நாடு கடத்தப்படும் வரை அரசாங்கத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பர். இதன்போது இவர்கள் வெளியில் நடமாடித்திரிய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் உறவினர்கள் இவர்களை சந்திக்க முடியும்.

இதேவேளை, குறித்த இலங்கையர்களுடன் கைது செய்யப்பட்ட இரண்டு பேரின் சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகாமையால் அவர் நேற்று முன்தினம் விடுவிக்கப்படவில்லை. (அ-2)



வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரகம் இணைந்து நடத்திய நடன நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி யாழ். சங்கிலியன் தோப்பில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா, ஸ்ரீமதி அலர்மேல் வள்ளிக்கு கேடயம் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# மரண அறிவித்தல்

## கனகசபை ஞானேஸ்வரன்



(லிகிதர் காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம்)

அளவெட்டி, கணேஸ்வரம் கொட்டன் சீமாலை பிறப்பிடமாகவும், துர்க்காபுரம் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை ஞானேஸ்வரன் அவர்கள் 19.08.2012 நேற்று அதிகாலை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கனகசபை-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், துர்க்காபுரம் மல்லாகத்தை சேர்ந்த காலஞ்சென்ற சண்முகராசா, திருமதி பொன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இளைப்பாறிய ஆசிரியை கனகம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் அன்பு மருமகனும், பாமதியின் (தெல்லிப்பளை ப.நோ. கூ. சங்கம்) அன்புக்கணவரும், பிருந்தா (1ஆம் ஆண்டு மாணவி, கணனி விஞ்ஞானப்பிரிவு,யாழ்.பல்கலைக்கழகம்), கபிலன் (2013- கலைப்பிரிவு மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி (கனடா), ஈஸ்வரி காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி, இரத்தினேஸ்வரன், கேதீஸ்வரன், யோகேஸ்வரன், ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற கருணைராஜா, சிதம்பரநாதன், தேவராஜா, தருமலிங்கம், சகாதேவன், ஜீவசகாயம், சுபாஜினி, ஜெயகௌரி, பூமணி, உமாசுதன், (திருமகள் அழுத்தகம்), ரேவதி (ஆசிரியர், யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்), செந்தூரன் (அம்பாள் கிறீம் ஹவுஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கணேசலட்சுமி (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுகன்யா (பிரதேச செயலகம், தெல்லிப்பளை) ஆகியோரின் திருமண பந்த சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 20.08.2012 இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தாமரை இல்லம் துர்க்காபுரத்தில் நடைபெற்று காலை 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தாமரை இல்லம்-
துர்க்காபுரம்,
மல்லாகம்.

(240)

தகவல்:-
மனைவி பாமதியும்
குடும்பத்தினரும்.

# பிள்ளையானுக்கும் கருணாவுக்கும் இடையே அரசியல் போட்டி

## கொழும்பு ஆங்கில இதழ் தகவல்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தனது சகோதரியை முதல்வராக்குவதற்கு கடும் பிரசாரத்தில் இறங்கியுள்ள பிரதியமைச்சர் முரளிதரனுக்கும் தற்போதைய முதல்வர் சந்திரகாந்தனுக்குமிடையே அரசியல் போட்டி அதிகரித்துள்ளதாக கொழும்பு ஆங்கில இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கில் தற்போதைய முதல்வர் பிள்ளையானின் நாட்கள் எண்ணப்படுகின்றன. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ருத்ரமலர் பாஸ்கரன் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றால் அவர்தான் அடுத்த முதல்வர் என பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய முதல்வர் இந்தப் பதவிக்குப் பொருத்தமானவர் அல்ல. ருத்ரமலர் மட்டுமே ஒரு பெண் வேட்பாளராக உள்ளார். சகோதரியை அடுத்த முதல்வராக்குவதற்கு கடுமையான பிரசாரங்களைச் செய்ய வேண்டும்.

சுதந்திர முன்னணியின் ஆதரவுடன் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் வாக்குகள் இந்த நேரத்தில் மிகவும் அவசியமாகவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை ஐந்து நிகழ்வுகளில் தேர்தல் வன்முறை தெரிவிக்கப்பட்டுள்ளன. எனினும் எல்லாம் நல்லபடியாக நடக்கின்றன என தெரிவித்துள்ளதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

15



தந்திரிமலையில் அமைந்துள்ள மகாவிகாரை-
தேவநம்பியதீசன் காலத்தில் அமைக்கப்பட்டது

நம்பி வணங்கி வந்த மக்கள் பௌத்த மதத்தைத் தழுவிய பின்னர் புத்தரை வழிபட்டுவருவாராயினர்.

பௌத்த ஆராமைகள் கல்வி நிலையங்களாக இயங்கின. பொது மக்கள் அவற்றில் கல்வி கற்க முடிந்தது. திரிபீடகத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய, சமயநூல்கள் எழுதப்பட்டன. அட்டுவா என்பது அவ்வாறான ஒரு இலக்கியமாகும். ஜாதகக் கதைவரிசையில் கவிசிலுமின, புத்தசரண, அமாவத்துர போன்ற நூல்கள் எழுதப்பட்டன.

பொதுமக்கள் எழுத வாசிக்கக் கற்றுக் கொண்டனர். கட்டிடக்கலை, கலை நுட்பங்கள் வளர்ச்சியடைந்தன. பௌத்தவிகாரைகள், தாது கோபங்கள் என்பன கட்டப்பட்டன. ஓவியக்கலை வளர்ச்சிகண்டது.

**சேனன், குத்திகன், எல்லாளன் தமிழ் மன்னர்களின் ஆட்சி**

**தேசநம்பிய தீசனுக்குப்பின்னர்**

தேவநம்பிய தீசனின் மரணத்தின் பின்னர் அவனுடைய இளைய சகோதரன் உத்தியன் அரசனானான். தேவநம்பிய தீசனுக்கு பிள்ளைகள் இல்லாமையால் அவனது சகோதரன் அரசகட்டிலேற நேர்ந்தது. உத்தியனின் எட்டாவது வருடகாலத்தில், அறுபது வயதினை அடைந்த மகிந்ததேரர் ஒரு மழைக்காலத்தில் சேத்திய பர்வதத் தில் பரிநிர்வாணம் அடைந்தார். இந்த மன்னனின் ஒன்பதாவது ஆட்சிக் காலத்தில் தனது ஐம்பத்தொன்பதாவது வயதில் சங்கமித்ததேரியும் பரிநிர்வாணமடைய நேர்ந்தது. மகிந்ததேரர் வசித்த விடத்தை மகா அரித்ததேரர் எடுத்துக்

சங்கமித்த தேரியைப் பெரும் ஊர்வலமாக அனுராதபுரத்திற்கு அழைத்துவந்தனர். போதிமரக்கிளை (அரசமரக்கிளை) பெரும் பூசைகளுடன் மகாமேகவனத்தில் நாட்டப்பட்டது. இந்த நிகழ்வு உந்துவப் பௌர்ணமி தினத்தில் நடைபெற்றது. இது துமிந்த வருகை என்று அழைக்கப்பட்டுகிறது. அனுராத புரத்தின் போதிமரம் பௌத்தர்களுக்கு மிகப் புனிதமானது. இப் போதி மரத்திலிருந்து அஷ்டபல ரூஹபோதி என எட்டு அரசமரக் கிளைகள் பெறப்பட்டன. இவை நாட்டின் பல பகுதிகளில் நடப்பட்டன. ஒன்று ஜம்புக்கோளப் பட்டினத்திலும் (யாழ்ப்பாணம்) இன்னொன்று கதிர்காமத்திலும் நடப்பட்டதென்பர்.

அனுலாதேவியும் வேறு பல

மகிந்ததேரரும் குழுவினரும் தங்குவதற்காக மகாமேகவனத்தில் வீடுகள், பிரிவேனாக்கள் அமைக்கப்பட்டன. பிற்காலத்தில் மகாவிகாரை பௌத்த மத மையாக அமைந்தது.

தேவநம்பிய தீசனால் பிக்குசாசனம் அமைக்கப்பட்டது. அவரதுகாலத்தில் 20 ஆயிரம் பிக்குகள் இருந்துள்ளதாக தீபவம்சம் என்ற நூல் கூறிகிறது. தேவநம்பிய தீசன் பல சமயக்கட்டிடங்களை அமைத்தான். முதலாவது தாதுகோபமான தூபராம அவனால் அமைக்கப்பட்டது. மகாவிகாரை பிக்குகளுக்காக கட்டப்பட்டது. மிகிந்தலையில் படகம என்ற விகாரை மிகிந்தலை தாது கோபம், பிக்குமார் இருப்பிடமான சஙகவாச என்பனவும் அமைக்கப்பட்டன. போதி வெள்ளரசுக்கிளைக்குப் பாதுகாப்பிற்காக போதிக்காவல் அரண்

மிகப்பழமையானதும் மிகப்பெரியதுமான புத்தர்சிலை-
தந்திரிமலையில் அமைந்துள்ளது



## சேனன், குத்திகன், எல்லாளன் தமிழ் மன்னர்களின் ஆட்சி

பெண்களும் சங்கமித்தை தேரியிடம் தீட்சை பெற்று புத்தபிக்குணிகளாகினர். அதனால் இலங்கையில் முதன் முதல் பிக்குணிகள் சங்கம் அமைக்கப்பட்டது. தேவநம்பிய தீசன் பௌத்த மதத்தைத் தழுவியதும் நாட்டு மக்களில் பெரும்பாலோர் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டனர்.



இசுருமுனிய இராஜ மகாவிகாரை- தேவநம்பியதீசன் கட்டுவித்தது

அமைக்கப்பட்டது. அத்துடன் மகத பாலி தருமசாலை, இசுருமுனியா விகாரை, ஜம்புக்கோள விகாரை, பிராச்சீனரமய,வெஸ்ஸகிரி விகாரை, உபாச்சிக்கா விகாரை, ஹத்தா ஹக விகாரை என்பனவும் கட்டப்பட்டன. ஆலமரம், பனைமரம், கற்பாறைகள், தீ, பேய்கள், ஆவிகள் என்பனவற்றை

சிலைகள் செதுக்கப் பட்டன. சமய விழாக்கள், விசாகதினக் கொண்டாட்டம், பொசன், எசல போன்ற விழாக்கள், பெரஹராக்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டன. பரம்பரை நாடகங்கள், ஆடல்பாடல்கள் என்பன வளர்ச்சிகண்டன. எளிமை யான விவசாய சமூகம் உருவானது. தானம், ஒழுக்கம், தியானம், ஒற்றுமை, விருந்தோம்பல் போன்றவை சமய வாழ்க்கையில் முக்கியம் பெற்றன.

தேவநம்பியதீசன் காலத்தில் இலங்கை முழுவதற்கும் அவனே அரசனாக விளங்கியுள்ளான். நாக தீபம், கதிர்காமம், சந்தான கமம் முதலான பிரசேதங்களிலிருந்த தமிழ்ச் சைத்திரியச் சிற்றரசர்கள் தேவநம்பிய தீசனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தார்கள். அதனால்தான் வடக்கே ஜம்புகோளத்துறைவரை அனுராதபுரமன்னனின் மேலாதிக்கம் நிலவியுள்ளது. போதிமர நடுகையின் போது கதிர்காமம், சந்தானகமம் சிற்றரசர்கள் சமூகம் கொடுத்துள்ளனர். என்பது முக்கியமான செய்தியாகும்.

கொண்டார். உத்தியனின் ஆட்சி பத்தாண்டுகள், கி.மு. 207 இல் இருந்து கி.மு. 197 வரை நீடித்தது. உத்தியனின் இளைய சகோதரன் மகாசிவன் என்பவன் அடுத்து அனுராதபுரத்தின் அரியணை ஏறினான். இவனே அனுராத புரத்தின் கிழக்குப்பகுதியில் நகரங்கள் விகாரைளை அமைப்பித் தவனாவான். பத்தாண்டு ஆட்சியின் பின்னர் மகாசிவன் இறக்க, அவனது தம்பி சூரத்தீசன் மன்னனாக முடி சூடிக்கொண்டான். அவன் ஹித்திக்க கந்தா விகாரை, பச்சினா பர்வத விகாரை, கொலம்பகாலா விகாரை, மகாகுல விகாரை முதலான விகாரைகளைக் கட்டுவித்தான். ஆர்வ மிகுதியால் 500 விகாரைகளைச் சூரத்தீசன் கட்டுவித்தான் என மஹாவம்வசம் குறிப்பிடும்.

தேவநம்பிய தீசன் வலிமை மிக்க மன்னனாக விளங்கிமையால் நாட்டில் அமைதி நிலவியது. அதனால் பௌத்தம் நாடொங்கும் பரவ முடிந்தது. நாகதீவிலும் (யாழ்ப்பாணக் குடாநாடு) பௌத்தம் பரவியது. தமிழ் பௌத்தர்கள் உருவாகினர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் கந்தரோடையில் காணப்படும் பௌத்த சின்னங்களும், வல்லிபுரத்தில் கிடைத்த பௌத்த சின்னங்களும் நாகதீவில் தமிழ் பௌத்தர்கள் இருந்தமையைப் பறைசாற்றுகின்றன. கந்தரோடையில் கிடைத்த பிராமி எழுத்துக் கொண்ட பாத்திரமொன்றில் ததஹபத தத்தவின் பாத்திரம் 3 என்றும், இன்னொன்றில் குணி என்றும் குறித்துள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



## அமரர் திருமதி பேரம்பலம் மாணிக்கம்(E.S.P)

### காரைநகர், வாரிவளவு

அன்புடையீர்!

கடந்த 25.07.2012 புதன்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர் திருமதி பேரம்பலம் மாணிக்கம்(E.S.P)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 23.08.2012 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். அந் நிகழ் விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் 24.08.2012 வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பம்பலப்பிட்டி இல.75, லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மாணிக்க தீபம் மலர் வெளியீட்டிலும் அன்று இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை நேரில் வந்து தரமுடியாமைகு வருந்துகின்றோம். அன்பர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.11, பெதெஸ்டா வீதி,
Off டிக்மன்ஸ் வீதி, கொழும்பு -05.
தொ.பே:-011 2503112, 077 1106323,
011 2542985

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சீ.790)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு எதிரான வாக்குகளை தடுக்க சூழ்ச்சி

## அனுரகுமார எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக அளிக்கப்படக் கூடிய வாக்குகளை தடுக்க பல்வேறு வழிகளில் முயற்சிக்கப்பட்டு வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பணம் மற்றும் வேறு வரப்பிரசாதங்கள் வழங்கி இவ்வாறு வாக்கு வேட்டை நடத்தப்படுகின்றது. அரசாங்கத்திற்கு எதிராக ஏனைய எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படும் வாக்குகளை குறைக்கும் நோக்கில் இவ்வாறு சூழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது.

எதிர்வரும் நாட்களில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் பகுதிகளில் விசேட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பிழையான பொருளாதாரக் கொள்கை, ஜனநாயக விரோத செயல்கள் போன்றவற்றினால் அரசாங்கத்தின் மீதான மக்கள் நம்பிக்கை வலுவிழந்துள்ளது. எனவே பொது மக்கள் வேறும் அரசியல் கட்சிகளுக்கு வாக்களிக்க தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் வாக்குச் சாவடிகளுக்கு செல்வதனை தடுக்க திட்டம் தீட்டப்பட்டு வருகிறது என்றார். (அ-2)

## தேர்தலுக்கு பயன்படுத்தப்படும்

# அரச வாகனங்களை கைப்பற்ற நடவடிக்கை

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் பிரசார நடவடிக்கைகளுக்கு வேட்பாளர்களால் பயன்படுத்தப்படும் அரசுக்கு சொந்தமான வாகனங்களை உடனடியாக கைப்பற்றுமாறு மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஏ. எல்.ரத்நாயக்க பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் பகுதிகளில் அரசுக்கு சொந்தமான வாகனங்கள் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மேலும் கேகாலை, அநுராதபுரம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளது. இதற்கமைய குறித்த வாகனங்கள் அனைத்தும் பொலிஸாரினால் கைப்பற்றப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாகாண பிரதம செயலாளருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# வீரவன்சவின் முயற்சிக்கு தடைவிதித்தார் டிலான்

(கொழும்பு)

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்சவின் தேர்தல் பிரசார முயற்சிக்கு அமைச்சர் டிலான் பெரேரா தடை ஏற்படுத்தியுள்ளார்.

வீடமைப்பு அமைச்சுக்கு சொந்தமான பதுளை காரியாலயத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கூரைத் தகடுகளை விமல் வீரவன்ச திருகோணமலை மக்களுக்கு வழங்க முயற்சித்துள்ளார்.

எனினும் இந்த முயற்சியை அமைச்சர் டிலான் பெரேரா தடுத்து நிறுத்தியுள்ளார். வாக்காளர்களுக்கு இடையே பகிரும் நோக்கில் சுமார் 4 ஆயிரம் கூரைத் தகடுகள் திருகோணமலை எடுத்துச் செல்லப்படவிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பதுளை மாவட்ட வறிய மக்களுக்கு விநியோகம் செய்யும் நோக்கிலேயே இந்தக் கூரைத் தகடுகள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் இவ்வாறு கூரைத் தகடுகளை திருகோணமலைக்கு எடுத்துச் செல்வது சட்ட மீறலாகும் என டிலான் பெரேரா தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் விமல் வீரவன்சவின் ஜே.என்.பி.கட்சி வேட்பாளர் ஒருவர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# குளவி கொட்டுக்கு இலக்காகி ஏழுபேர் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா)

மஸ்கெலியா காட்டு மஸ்கெலியா தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்கான ஏழு பேர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்கள் நேற்று முன்தினம் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது தேயிலை செடியில் இருந்து குளவிக் கூடு கலைந்ததாக கூறப்படுகின்றது.

இதன்போது குளவிக் கொட்டுக்கு இலக்கான ஏழு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் சிறுமி ஒருவரும் அடங்குவதாக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ-2)




★1866-அமெரிக்க ஜனாதிபதி அண்ட்ரூ ஜோன்சன் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

★1914-முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்சை ஜேர்மனியப் படைகள் கைப்பற்றின.

★1917-இலங்கையில் ஒரு ரூபாய்த் தாள் வழங்கப்பட்டது.

★1940-மெக்சிக்கோவில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் ரஷ்யப் புரட்சியாளர் லியோன் ட்ரொட்ஸ்கி படுகாயமுற்று அடுத்த நாள் மரணமானார்.

★1944-இரண்டாம் உலகப் போர்: ருமேனியா மீது சோவியத் ஒன்றியம் தாக்குதலை ஆரம்பித்தது.

★1948-இலங்கை குடியுரிமை சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் 10 இலட்சம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.

★1953-ஐதரசன் குண்டைத் தாம் சோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.

★1960-செனெகல் மாலிக் கூட்டமைப்பில் இருந்து விலகி தனி நாடாக அறிவித்தது.

★1968-பனிப்போர்: 2 இலட்சம் வார்சா ஒப்பந்த நாடுகளின் படைகள் செக்கோஸ்லவாக்கியாவினுள் புகுந்தன.

★1975-நாசா வைக்கிங் 1 விண்கலத்தை செவ்வாயை நோக்கி ஏவியது.

★1977-நாசா வொஜேயர் 2 விண்கலத்தை ஏவியது.

★1988-ஈரான் -ஈராக் போர்: 8 ஆண்டுகள் போரின் பின்னர் போர் நிறுத்தம் உடன்பாடாகியது.

★1991-எஸ்தோனியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகி மீண்டும் தனி நாடாகியது.

★1997-அல்ஜீரியாவில் 60 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★2006- அருட்தந்தை ஜிம் பிறவுண் காணாமல் போனமை கத்தோலிக்க அடிகள் ஜிம் பிறவுண் மற்றும் அவரது உதவியாளர் விமலதாஸ் ஆகியோர் அல்லைப்பிட்டியில் காணாமல் போனார்கள்.

★2006- நமது ஈழநாடு பணிப்பாளர் முன்னாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராஜா சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புக்கள்

★1910- ஈரோ சாரினென், கட்டடக் கலைஞர் (இ.1961)

★1844-ராஜீவ் காந்தி, இந்தியப் பிரதமர் (இ.1991)

★1946-நாராயண மூர்த்தி, இந்தியத் தொழிலதிபர்

### இறப்புக்கள்

★1823-திருத்தந்தை ஏழாவது பயஸ் (பி.1740)

★1854-பிரீடரிக் ஷெல்லிங், ஜேர்மன் மெய்யியலாளர் (பி.1775)

★1914-பத்தாம் பயஸ் (திருத்தந்தை) பி.1835)

★1915-போல் ஏர்ள்ரிச், ஜேர்மன் அறிவியலாளர் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர். (பி.1854)

★1917-அடொல்ஃப் வொன் பாயெர், ஜேர்மன் வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1835)

★1961-பேர்சி பிறிட்ஜ்மன் , அமெரிக்க இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1882)



*பிரீடரிக் ஷெல்லிங்*

பிரீடரிக் வில்ஹெல்ம் யோசெப் ஷெல்லிங் பின்னாளில் ஃவான் ஷெல்லிங் என்று அழை க்கப்பட்ட டாய்டச் (ஜேர்மன்) நாட்டு மெய்யிய லாளர் ஆவார். இவர் மெய்யியலில் டாய்ட்ச் கருத்தியம் என்று கூறப்படும் கருத்தெழுச்சி யில் பங்கு கொண்டு ஆக்கம் அளித்தவர். டாய்ட்ச் கருத்தியம் வரலாற்றில் இவர் தன க்கு அறிவுரை தந்து முன்னோடியாக இரு ந்த யோஃகான் ஃவிஃக்டெயுக்கும் பின்னர் தன்னுடன் பல்கலைக்கழகத்தில் ஓரறையில் வாழ்ந்த ஹெகலுக்கும் இடைப்பட்டவராக கருதப்படுகின்றார்.

ஷெல்லிங்கின் மெய்யியலும் புரிந்து கொள்ளக் கடுமையானது என்று பெயர் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முகாமைவிட்டு வெளியே போ!" என்று உதவி அரசாங்க அதிபர் உத்தரவிட்டதாக கிராம அலுவலர் தம்மிடம் தெரிவித்ததாக இந்த மக்கள் குறிப்பிடுகின்றனர். அகதி முகாங்களை இல்லாமல் செய்வதன் மூலம் வலிகாமம் வடக்கு போன்ற பாதுகாப்பு வலய மக்களின் பிரச்சினைகளை இல்லாமல் காட்ட



அரசாங்கம் முயற்சிக்கிறது. அதன் மூலம் அந்த மக்களின் நிலத்தை நிரந்தரமாக அபகரிக்க முயற்சிக்கிறது. அதற்காக இந்த மக்களை முகாங்களைவிட்டு வெளியேபோங்கோ என்று குறிப்பிடுவது மிகவும் கேவலமான நடவடிக்கை என்பதற்கப்பால் எத்தகைய மனித உரிமை மீறல் என்பதே முக்கியமானது. இந்த மக்களை வெளியேற்ற நிர்ப்பந்திக்கும் முகமாக இந்த அகதி முகாமில் மேற்கொள்ளப்பட்ட குப்பை அள்ளுதல், நீர் விநியோகம் முதலிய நடவடிக்கைகள் நிறுத்தப்

சாங்க அதிகாரிகள். அரசும் இராணுவமும் இந்த மக்களின் நிலத்தை அபகரிக்க முனையும்பொழுது அதற்கு மிகவும் ஒத்தாசையாக செயற்படும் இத்தகைய அதிகாரிகள் இந்த மக்களின் அவலத்தை தின்று தமது நலனைப்பெற முயல்கின்றனர். கூடாரங்களை பிடுங்கிக்கொண்டு போங்கோ என்றும் சொந்தச் செலவில் மலம் அள்ளுங்கள் என்றும் இரக்க மற்ற அரச அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

ஒரு அகதிமுகாமின் தோற்றம் இப்படியும் இருக்குமா? என்று கேட்கத் தோன்றுகிறது. மலங்கள் நிரம்பி மல சலக்கூடங்கள் பாவிக்கப் படாமல் மூடப்பட்டுள்ளன. ஒரு, இரு மலசல அறைகளைத் தவிர எல்லாமே மூடப்பட்டிருக்கின்றன. மலசல அறைகளுக்கு மேலே குப்பைகள் பல மாதங்களாக அள்ளப்படாமல் குவிந்து கிடக்கின்றன. இவைகளின் துர்நாற்றங்கள் அகதி முகாங்கள் முழுவதற்கு

பிள்ளையளின்ரை வாழ்க்கையாவது நல்லா இருக்க வேணும்" என்று குறிப்பிடுகின்றார் மல்லாகத்திலுள்ள விநாயகர் முகாமில் வசிக்கும் தாயொருவர். பிள்ளையளுக்கு அகதி என்ற அடையாளமும் அகதிமுகாம் பிள்ளையள் என்ற அடையாளமும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார். பாடசாலைகளில் முகாம் பிள்ளைகளை புறக்கணிப்பதாகவும் அந்தத்தாய் குற்றம் சாட்டினார். "ஒரு சின்ன மழையில் சேறும் சகதியுமாக மாறிவிடும் எங்கள் முகாம்" என்று குறிப்பிடுகிறார்கள் விநாயகர் அகதி முகாம் வாசிகள்.

முகாமில் அமைக்கப்பட்ட தேவாலயத்தில் மக்கள் படுத்துக் கிடந்தார்கள். "எங்க புலியள் நிக்கினம் என்று தெரியாமல் எங்களை அடிச்சுக் கொன்றுவிட்டு இன்று சோறு தருகிறார்கள். அதை நாங்கள் மறப்பமோ?" என்று அந்த முகாமின் முதியவர் ஒருவர் கேட்டார். "எங்கட பிரச்சினையை நாங்களே சொல்ல முடியாத வாழ்க்கை" என்று அவர் மனம் நொந்து பேசினார். மத்திய கிழக்கு நாடுகளுக்குச்சென்று உழைப்பதைப் போல இப்பொழுது சிங்களவர்கள் வலிகாமம் வடக்கிற்கு படையெடுப்பதாக சொல்லிய அந்த முதியவர் "பாதுகாப்பாகவும் வசதிவாய்ப் போடும் சிங்களவர்கள் காங்கேசந்துறையில் கல்லுடைத்து ஏற்றிச் செல்கின்றனர்" என்று சொல்கிறார்.

"ஆமியைக், காணாமல் குண்டு விழும்பொழுதும், செல்லடிக்கும் பொழுதும் நாங்கள் நிம்மதியாய் எங்கட மண்ணில இருந்தோம். உடுத்த உடுப்போட கலைக்கப்பட்டு இப்ப ஒண்டுமில்லாமல் கிடக்கிறம்" என்று மயிலிட்டியைச் சேர்ந்த நாகலிங்கம் குறிப்பிட்டார். "எங்கட கோயில்ல புத்தர், வீட்டில ஆமி, எங்கட

முதியவர்கள்.

ஊரைப்பிரிந்த ஏக்கமே எனது அம்மாவையும் அப்பாவையும் பெரும் தாக்கத்திற்கு உள்ளாக்கியது என்று குறிப்பிடுகிறார் யாழ். பல்கலைக் கழக முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன். தெல்லிப்பளை கட்டுவனைச் சேர்ந்த முன்னைநாள் துணைவேந்தர் தனது தந்தை ஊருக்குத் திரும்ப வேண்டும் என்றும் அங்குதான் உயிரைவிட வேண்டும் என்றும் மரணத்தின் இறுதி நிமிடம் வரை ஏங்கிக் கொண்டிருந்ததாக குறிப்பிடுகின்றார். எங்களுடைய வாழ்க்கையும் எங்களுடைய கலை முதலிய ஒவ்வொரு அசைவுகளும் "எங்கள் மண்ணில் நிகழ்த்தும் பொழுதுதான் உயிர்ப்போடு இருக்கும். மீண்டும் எங்கள் ஊரில எனது பிள்ளை காலடி வைக்கவேண்டும்" என்று மிகுந்த எதிர்பார்ப்புடன் பேசுகிறார்.

"ஊருக்குத் திரும்புவதைத் தவிர எங்களிடம் வேறு எந்த இலட்சியமும் கனவும் கிடையாது" என்று இந்த மக்கள் தெரிவிக்கும் பொழுது இந்த மக்களின் அகதி அடை யாளத்தை பறித்து அகதி முகாம்களை விட்டு மக்களை வெளியேற்றும் நிகழ்ச்சி நிரலை அரசாங்கம் வடிவமைத்திருக்கிறது; இந்த மக்களின் நிலங்களை பறித்து இராணுவ வலயத்தை விரிவுபடுத்தி ஈழமக்களின் வாழ்க்கைக்கு குந்தகம் ஏற்படுத்தவே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது; இந்த மக்கள், ஈழத்தின் வளமான பகுதியை பூர்வீகமாகக் கொண்டவர்கள்; ஏற்றம் நிறைந்த அழகிய வாழ்வினை அனுபவித்தவர்கள், இன்று தமது சொந்த நிலங்களை இழந்து யாழ்ப்பாணம் முதல் உலகின் பல்வேறு பாகங்கள் வரை அகதிகளாக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

# இரு தசாப்தங்களாகியும் தொடர்கிறது வலிகாமம் மக்களின் அவல வாழ்வு

மக்களின் நிலங்கள் இராணுவத்தின், சிங்களவர்களின் பிடியிலிருந்து மீட்கப்பட்டு, 25 ஆண்டு கால அவல வாழ்வும் தீராப் போராட்டமும்

பட்டுள்ளன. இதற்குக் காரணமாக இது அகதி முகாமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கண்களுக்கு இது அகதி முகாமில்லை. அரசாங்கத்தின் கண்களுக்கு இதுதான் தமிழர்களுக்கு பரிசளிக்கப்பட்ட வசந்தம். ஈழ மக்களின் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் போராட்டமும் இலங்கை அரசாங்கத்தின் கண்களுக்கு எப்படித் தெரிகின்றன என்பதற்கு இந்த மக்கள் மீதான பார்வையும் ஓர் உதாரணமாகும்.

குப்பைகளை அகற்றாமல் விடுவதானாலும் மலசலங்களைக்கூட அகற்றாமல் விடுவதானாலும் நீரையும்

**தமிழ்மாறன்**

உணவையும் வழங்காமல் விடுவதானாலும் இந்த மக்கள் அகதி முகாங்களை விட்டு வெளியேற்றப் போவதில்லை. இந்த மக்கள் நோயாலும் பட்டினியாலும் கொல்லப்படுவார்கள். இந்த மக்களை அழிக்கவா அரசு இப்படி திட்டமிடுகிறது?

தங்களை ஆடு, மாடுகளைப்போல நடத்துவதாக இந்த மக்கள் குறிப்பிடுகின்றனர். "உங்களுக்கு மீள்குடியேற்றம் இல்லை எங்காவது போங்கள்" என்று குறிப்பிடுகின்றனர் அர

மாக வீசிக்கொண்டிருக்கிறது. இது தான் அபிவிருத்தியின் வாசனையா? வடக்கின் வசந்தத்தின் வாசனையா? சித்திரவதைக் கூடுகளைப்போல இருக்கின்றன மக்கள் வசிக்கும் உக்கிய தகரக் கூடாரங்கள். எந்தவொரு நோயும் சுலபமாக தாக்கும் சூழலில் இந்த மக்கள் வசிக்கின்றனர்.

பள்ளமும் புட்டியுமான நிலம் மழைக்காலத்தில் வெள்ளம் தேங்கக் கூடிய அபாயத்தில் உள்ளது. கழிவு வாய்க்கால்களோ வீடுகளையும் முற்றங்களையும் ஊடறுத்துச் செல்கின்றன. மிகவும் நெருக்கமாக மக்கள் வசிக்கின்றனர். பல வீடுகளில் குப்பைகளைக் கொட்ட முடியாமல் அவற்றை பேசின், பைகளில் நிரப்பி வைத்திருக்கிறார்கள். "இந்த நாட்டில் நாய்குள்ள மரியாதைகூட எங்களுக்கில்லை" என்று மிகுந்த ஆதங்கத்துடன் மக்கள் குறிப்பிட்டனர். "நாயை அடித்தால், கேட்க சட்டமுள்ள நாட்டில் எங்களை இப்படி வதைப்பதைக் கேட்க யாருமில்லை" என்று அவர்கள் சொல்கின்றனர். "எங்கட ஊருக்கு விட்டால், நாங்கள் பேசாமல் போயிடுவம் அதுக்குத்தானே இப்படிக் கிடக்கிறம்" என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

"எங்கட [illegible] வாழ்க்கையா[illegible] எங்கட



மண்ணில சிங்களவன், நாங்க எங்க இருக்கிறம்? எப்பிடி இருக்கிறம்? இதிலயும் இருக்கவிடமாட்டம் எண்டு சொல்லுகினம்; அகதியாகவும் இருக்க விடமாட்டம் எண்டு துரத்துகினம்" என்று நாகலிங்கம் ஆதங்கத்துடன் பேசினார். ஊரை இழந்ததினால், மனம் நொந்து செத்தவர்கள் போக, ஊரில் சென்று சாகவேணும் என்று காத்திருக்கிறார்கள் பல

நீங்கி, மயிலிட்டி, தையிட்டி போன்ற வலிகாமம் வடக்கில் வாழ்ந்த இம் மக்கள் தங்கள் சொந்த நிலத்திற்குத் திரும்ப வேண்டும்; இந்த மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியானது பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதிகளால் வெளியுலகுக்கு கொண்டு வரப்பட வேண்டும்; இந்த மக்களுக்கான நியாயமான தீர்வை வழங்குமாறு இலங்கை அரசு நிர்ப்பந்திக்கப்பட வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலூர் சிறையிலிருந்து புலிகளைதப்பிக்க விட்டேன்

## வைகோ அதிர்ச்சித்தகவல்

(சென்னை)

வேலூர் சிறையிலிருந்து அகழி வழியாக தப்பிய இலங்கைத் தமிழ் இளைஞர்கள் 45 பேரில் மூவரை புதுக்கோட்டையிலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு நான்தான் அனுப்பி வைத்தேன் என வைகோ தெரிவித்துள்ளார்.

கடந்த 1995 ஆம் ஆண்டு இந்திய சுதந்திர தினத்தன்று வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த விடுதலைப்புலிகள் 43 பேர் அகழி வெட்டி அதன் மூலமாக சிறையில் இருந்து தப்பிய சம்பவம் நடந்தது.

நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவத்தில் தப்பியோடிய புலிகளில் 21 பேர் மட்டுமே அடுத்த சில நாட்களில் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஏனையவர்கள் பிடிபடவில்லை.

புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் வைகோ உரையாற்றுகையில்,

வேலூர் சிறையிலிருந்து அகழி வழியாக தப்பிய இலங்கைத் தமிழ் இளைஞர்கள் 45 பேரில் மூவரை புதுக்கோட்டையிலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு நான்தான் அனுப்பி வைத்தேன் என தெரிவித்தார்.

சிறையில் இருந்து தப்பிய புலிகள் இலங்கைக்கு தான் அனுப்பி வைத்ததாக வைகோ ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறையில் இருந்து தப்பிய கைதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதே குற்றம் எனும் நிலையில் அவர்களை வேறு நாட்டுக்கு தப்பிச் செல்ல உதவியதும் அதை வெளிப்படையாக வைகோ பெருமிதமாகத் தெரிவித்திருப்பதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)


# பதவி வெற்றடம்

- கணக்காளர் (இருபாலாரும்)
- அலுவலக செய்தியாளர் மற்றும் பயிலுநர்கள் (இருபாலாரும்)
- கணனி தமிழ் தட்டச்சு தெரிந்தவர்கள் மற்றும் பயிலுநர்கள் (பெண்கள்)
- ஒப் செட் இயந்திரம் இயக்குநர்கள் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)
- களஞ்சிய காப்பாளர் (ஆண்கள்)

பொருத்தமான தகுதியுடையவர்கள் தாம் தெரிவு செய்யும் பதவியைக் குறிப்பிட்டு சுய விபரம் அடங்கிய விண்ணப்பப்படிவத்தில் தொலைபேசி இலக்கத்தை தெளிவாக குறிப்பிட்டு 25.08.2012 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 7Km தூரத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மனிதவள முகாமையாளர்,
வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


# உணவு விசமானதில் 55பேர் ஆஸ்பத்திரியில்

உணவு விஷமாகியமை காரணமாக பாதிப்புக்குள்ளான 55 மாணவர்கள் ஹதுன்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இம்முறை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு முகங்கொடுத்துள்ளவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை வில்கமுவ கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஹதுன்கமுவ மகாவித்தியாலய மாணவர்களே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலை நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றின் பின்னர் வழங்கப்பட்ட உணவே விசமாகியுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் மாணவர்களது நிலை பாரதூரமாக இல்லை எனவும் தற்போது மாணவர்களது சிகிச்சைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(அ-2)

# எதிர்க்கட்சிகள் தேர்தலை கண்டு அஞ்சி ஓடுகின்றன

## ஜனாதிபதி கிண்டல்

எதிர்க்கட்சி தேர்தலை கண்டு அஞ்சுகிறது. தாம் எதிர்க்கட்சியில் அங்கம் வகித்த காலத்தில் தேர்தல்களை நடத்துமாறு அரசாங்கங்களுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் பிரயோகித்து வந்ததாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாகாணசபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கும் நோக்கில் அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய எதிர்க்கட்சிகள் எப்படியாவது தேர்தலை தடுத்து நிறுத்த வேண்டுமென்றே விரும்புகின்றன.

அரசாங்கத்திற்கு நன்றி பாராட்ட இந்தத் தேர்தலை மக்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். வரட்சி மற்றும் ஏனைய பிரச்சினைகளும் காணப்பட்ட போதிலும் 27 ஆண்டுகளாக நாட்டில் நிலவிய யுத்தத்தை இந்த அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளது. தற்போது நாட்டில் பாரியளவில் அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (அ-2)

# அமைச்சர், பிரதி அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் மோசடி விசாரணை

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் மோசடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.எட்டு அமைச்சர்கள், ஐந்து பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட 90 ஆளும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் ஜனாதிபதி விசாரணைப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசாரணை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையும் பெற்றுக்கொள்ளப்பட உள்ளது.

இந்த அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி விசாரணைப் பிரிவும் ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவும் தனித்தனியாக விசாரணைகளை நடத்தவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற எழுத்து மூலம் மற்றும் வாய்மொழி மூல முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணை நடத்தப்படவுள்ளன.

10 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐந்து மாகாண அமைச்சர்கள் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள், இரண்டு மாகாண ஆளுநர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு எதிராக முறைப்பாடு செய்யபட்டுள்ளது. (அ-2)

# தொடரும் வரட்சியால் நன்னீர் மீன்பிடி பாதிப்பு

வட பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக குளங்களில் நீர் வற்றியுள்ளமையினால் நன்னீர் மீன்பிடித்தொழில் பாதிப்படைந்துள்ளதாக வவுனியா நன்னீர் மீன்பிடிப்போர் சங்கத்தின் உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது ஜீவனோபாயத் தொழிலான நன்னீர் மீன்பிடித்தொழில் வரட்சி காரணமாக பாதிப்படைந்துள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் மழை பெய்தாலும் குளங்களில் உள்ள மீன்கள் அழிவடைந்துள்ளமையினால் தமது தொழிலினை உடன் மேற்கொள்ளமுடியாதிருக்குமெனவும் தெரிவித்த அவர் இவ்வாறான நிலையில் தாம் மாற்றுத்தொழில் ஒன்றினை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளையோ அல் லது வாழ்வாதார உதவிகளையேனும் செய்து தருவதற்கு அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தெரிவித்தார். (அ-9-266)


9 ஆம் ஆண்டு நினைவலைகள்

செல்வி மங்கையர்க்கரசி பொன்னம்பலம்
(மங்கை)

மலர்வு: குப்பிளானில் 23.08.1978

திதி:-07.09.2012

உதிர்வு: லண்டனில் 20.08.2003

அன்பின் திருவுருவாய்
பாசத்தை பொழிந்த
இனிய இளைய அழகு மகளே!

மங்கையே!
ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
ஆறுமோ எம் துயர்தான்
உன் அகண்ட நினைவுகளை
மனதில் சுமந்தபடி ....



உன் நினைவில் வாழும்.... வாடும்..
அப்பா , அம்மா ,அண்ணன்மார்,
அக்காமார்.

பொன்-மணிவாசா
குப்பிளான் தெற்கு

(163)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

196

## புலி மீசை மருந்து!

கொரியாவின் லூன் மலைத் தொடரில் துறவி ஒருவர் இருந்தார். மிகச்சிறந்த ஞானி. மந்திர தந்திரங்களிலும் திறமையானவர். ஆயிரமாயிரம் மனிதர்கள் அவரிடம் அறிவுரை பெறுவதற்காக வருவார்கள். ஒருநாள் அவரைப் பார்ப்பதற்காக ஒரு பெண் வந்தாள். என் கணவர் என்னை வெறுக்கிறார். அவன் என்மீது அன்பு கொள்ளும்படி செய்ய வேண்டும் என்று வேண்டினாள்.

துறவி அப்படி அவர் உன்னை வெறுப்பதற்கான காரணம் என்ன? என்று கேட்டார்.

என் கணவர் போருக்குச் செல்வதற்கு முன்பு என்மீது மிகவும் அன்பு செலுத்தினார். என் வேலைகள் எல்லாவற்றிலும் உதவி செய்தார். ஆனால் மூன்று வருடங்கள் கழித்துத் திரும்பி வந்திருக்கும் அவர் வெறுப்புடனும் விரக்தியுடனும் இருக்கிறார் என்று விளக்கினாள்.

இது எல்லாம் போருக்குச் சென்றதால் ஏற்பட்ட விளைவுதான் என்றார் துறவி. அவர் என் மீது மீண்டும் அன்பு கொள்ளும்படி செய்வதற்கு நீங்கள் மருந்து தருவீர்கள் என்று கேள்விப்பட்டேன் என்றாள்.

அப்படி ஒரு மருந்தைச் செய்ய என்னால் முடியும். நிறையப் பொருட்களைச் சேர்த்துத்தான் அந்த மருந்தைச்



செய்யவேண்டும். ஆனால் மிக அவசியமாகத் தேவைப்படும் ஒரு பொருள் மட்டும் என்னிடம் இல்லை என்றார் துறவி.

அது என்ன என்று சொல்லுங்கள். நான் கொண்டு வந்து தருகிறேன் என்றாள் அவள். புலியின் மீசையில் இருந்து ஒரேயொரு ரோமம் வேண்டும் என்றார்.

சரி எப்பாடுபட்டாவது கொண்டு வருகிறேன் என்று உறுதி அளித்து விட்டு அவள் புறப்பட்டுச் சென்றாள். அடுத்த நாளே அவள் புலியைத் தேடிச் சென்றாள்.

காட்டுக்கு அருகில் உள்ள நதியின் கரையில் ஒரு புலியைக் கண்டாள். அவளைப் பார்த்த புலி உறுமியது. உடனே பயந்து பின் வாங்கினாள் அவள்.

முதல்நாள் புலியைக் கண்ட அதே இடத்துக்கு அடுத்த நாளும் சென்றாள். அவளைப் பார்த்து புலி மீண்டும் உறுமியது. மறுபடியும் அவள் பின்வாங்கிச் சென்றாள். இப்படித் தினமும் அவள் அந்த இடத்துக்குச் சென்றதால் புலிக்கு அவளது அண்மை பழகிவிட்டது. அது உறுமுவதை நிறுத்தியது.

அவள் அந்தப்புலிக்கு உணவு கொண்டு வந்து கொடுத்தாள். நாட்கள் செல்லச்செல்ல புலி அவளிடம் நட்புடன் பழகத் தொடங்கியது அவளிடம் இருக்கும் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக மிக நெருக்கமாக வந்தது.

ஒருநாள் அவள் அச்சத்துடனேயே புலியின் தலையைத் தடவினாள். சில நாட்கள் கழித்து புலியின் கன்னப் பகுதிகளில் வருடினாள். அப்படி ஒருநாளில் அவள் மிகத் திறமையாகப் புலியின் மீசை ரோமங்களில் ஒன்றைப் பறித்தாள்.

அந்த ரோமத்தை எடுத்துக் கொண்டு துறவியிடம் ஓடினாள் அவள். துறவியைப்பார்த்தவுடன் எனக்குக் கிடைத்துவிட்டது என்று வெற்றிக் கூச்சலிட்டாள்.

நல்லது என்றார் துறவி. அந்த ரோமத்தை எடுத்துச்சென்று அடுப்புத் தீயில் எறிந்தார்.

ஓ நீங்கள் என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள் என்று பதற்றத்துடன் கேட்டாள் அவள். அந்த மீசை ரோமத்தைக்கொண்டு அற்புத சக்தியுடைய மருந்து தயாரித்துத் தருகிறேன் என்றுதானே சொன்னீர்கள்?

உனக்கு அந்த மருந்து தேவையில்லை பெண்ணே. புலியின் அன்பை நீ எப்படிச் சம்பாதித்தாய்? அன்பான செயல்கள் மூலமும் மிகவும் பொறுமையாக இருந்ததன் மூலமாகவும் தானே? அப்படியென்றால் ஒரு மனிதன் புலியைவிட மோசமாகவா நடந்து கொள்வான்? புலியின் அன்பை நீ பெற்றது போலவே கணவனின் நேசத்தையும் பெற முயற்சி செய். என்று துறவி மென்மையாகச் சொன்னார். அவரின் வார்த்தைகளில் உள்ள உண்மையை உணர்ந்து நன்றி சொல்லி விடைபெற்றாள் அவள்.

## மரம் தந்த மறுமலர்ச்சி!



அனிஷா,மனிஷா இரண்டுபேரும் நல்ல நண்பர்கள்! இருவரும் பள்ளி விடுதியில் தங்கிப்படித்துவந்தனர். சுற்றுச்சூழல் பற்றிய கட்டுரைப் போட்டிகள் நடக்கவிருப்பதாகவும் விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயரை பதிவு செய்துகொள்ளும்படியும் தலைமையாசிரியர் அறிவித்தார்.

மனிஷாவின் பெயரை அவள் வகுப்பு ஆசிரியை பரிந்துரை செய்தார். மேலும் மனிஷாவிடம் சுற்றுச்சூழல் பற்றிய ஒரு கட்டுரையை தயார் செய்துவந்து தன்னிடம் காட்டுமாறும் கூறினார். மறுநாள் மனிஷா தயாரித்து எடுத்து வந்திருந்த கட்டுரையை வகுப்பு ஆசிரியை படித்தார்.

மனிஷா, உன் கட்டுரை நன்றாகவேயில்லை. நீ சொல்ல வரும் விடயமும் புரியவில்லை. இதில் ஏராளமான எழுத்துப்பிழைகள் வேறு. வகுப்பில் உன் பெயரை மட்டும்தான் பரிந்துரைத்துள்ளேன். ஆனால் நீ இப்படி எழுதினால் பரிசே கிடைக்காது. இன்னமும் நன்றாகத் தயாராக வேண்டும் என்று சற்றுக் கோபமாகவே வகுப்பு ஆசிரியை திட்டினார்.

இதையடுத்து வகுப்புத் தோழிகளும் மனிஷாவைக் கிண்டல் செய்தனர். இதனால் மனிஷா மனம் வருந்தினாள். மதிய உணவு இடைவேளையின் போது நடந்த விடயங்களைத் தன் நெருங்கிய தோழி அனிஷாவிடம் கூறினாள்.

ஏய், மனிஷா! டீச்சர் சொன்னதை நினைக்சுக் கவலைப்படறீயா? எல்லாமே நல்லதுக்குத்தான். நீ முதல் பரிசு வாங்கவேண்டும் என்ற அக்கறையில் தான் டீச்சர் அப்படிப் பேசியிருப்பாங்க. அதனால்தான் நீ எழுதிய கட்டுரையைப் பாராட்டாமல் இன்னமும் சிறப்பான ஒரு கட்டுரையை தயார் செய்ய டீச்சர் உன்னைத் தூண்டிவிட்டிருக்காங்க என்று அனிஷா ஆறுதல் சொன்னாள். இருப்பினும் மனிஷா ஆறுதல் அடையவில்லை. சோகமாக அருகில் மரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மரத்தின் இலைகள் உதிர்ந்திருந்தன. ஒரு ஓவியர் அதனடியில் ஓவியம் ஒன்றை வரைந்து கொண்டிருந்தார். அனிஷாவும் அந்த மரத்தைப் பார்த்தாள். அப்போது மனிஷாவின் மனதுக்குள் ஒரு பளிச் ஐடியா தோன்றியது.

ஏய் மனிஷா அந்த மரத்துல ஒரு விடயத்தைக் கவனிச்சியா? எல்லா இலைகளும் உதிர்ந்து ஒரேயொரு இலை மட்டும் இருக்கு. அதுவும் இப்பவோ, அப்பவோ உதிர்ந்துவிடுவது விடுவதுபோல் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு இந்த மரத்துக்கு அடியில்தான் நாம் குறூப் போட்டோ எடுத்துக்கொண்டோம். அப்போது அந்த மரம் எப்படி அழகாக இருந்தது. ஆனால் இப்போது இந்த மரத்தைப்பார்க்கவே பரிதாபமாக இருக்குது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு அழகான மரம் என்று அதை எல்லோரும் ரசித்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த மரத்துக்கு அருகில் யாருமே செல்வதில்லை என்று உணர்ச்சிவசப்பட்டவளாக அனிஷா பேசினாள். ஆனால் மனிஷா எதுவும் பேசாமல் அந்த மரத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏய் மனிஷா! என்னாச்சு உனக்கு? இன்னமும் நீ அதையே நினைச்சுட்டு இருக்கியா? என்றாள். இல்லை அனிஷா, கடந்த கட்டுரைப் போட்டிகளில் நான் நன்றாக கட்டுரை எழுதினேன். ஆனால் என்னால் இப்போது முழுமையான கவனம் செலுத்த முடியவில்லை. இந்த மரத்தோட நிலைமை தான் எனக்கும் அவ்வளவுதான்.



இனிமேல் இந்தக் கட்டுரைப்போட்டியில் வெற்றிபெறமுடியாது. மற்றவர்கள் எல்லோரும் என்னை இன்னமும் கிண்டல் செய்யப்போறாங்க என்று சொல்லிவிட்டு அழுதுகொண்டே வகுப்புக்கு ஓடினாள் மனிஷா.

தன்தோழியின் நிலை குறித்துக் கவலைப்பட்டாள் அனிஷா! பள்ளி முடிந்தது. பின்பு இருவரும் ஒன்றாகவே விடுதிக்குச் சென்றனர். விடுதி அறையில் இருந்தும் அதே மரத்தைப் பாாத்துக்கொண்டிருந்தாள் மனிஷா. சிலநாட்கள் கழிந்தன. அன்று பார்த்த அதே மரம் பச்சைப்பசேல் என்று கிளைகள் முழுவதும் இலைகளாகக் காட்சியளித்தன.

புதியதாகப் பிறந்த குழந்தை போல அந்த மரம் மெல்லிய பசுமையான இலைகளை அசைத்து காற்றுடன் உறவாடிக் கொண்டிருந்தது. அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த மனிஷா ஏதேச்சையாக அந்த மரத்தைப் பார்த்தாள். உடனே தன் தோழி அனிஷாவைப் பார்க்க ஓடினாள்.

ஏய் அனிஷா... அங்கு பார் மரமே புதுசா இருக்கு. அன்று பார்த்த போது மரத்தில் ஒரேயொரு இலை மட்டுமேயிருந்தது. ஆனால் இன்றைக்கு எவ்வளவோ இலைகள் என்று சொல்லி ரசித்தாள் மனிஷா.

ஏய் அன்றைக்குப் பார்த்தது இலையுதிர்காலம். அப்போது இலைகள் எல்லாம் உதிரத்தான் செய்யும். இப்போது மீண்டும் வசந்தகாலம் வந்துவிட்டது. இலை கள் எல்லாம் புதியதாக முளைக்கும். இலைகள் உதிர்ந்தபோது நாம் இனி அழகாக மாறுவோம் என்று மரம் வருத்தப்பட்டு இருக்குமா? தன்னம்பிக்கையுடன் காத்திருந்தது. இப்போது வசந்தகாலத்தில் இலைகள் முளைத்து முன்பைவிட அழகாக காட்சியளிக்கிறது என்று தொழியை தேற்றினாள் அனிஷா.

இதைக்கேட்டு புதிய உத்வேகத்துடன் புறப்பட்டாள் மனிஷா. பிறகென்ன கட்டுரைப்போட்டியில் முதல் பரிசுடன் வகுப்புக்கு திரும்பினாள் அனைவரும் அவளைப் பாராட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் பயண எச்சரிக்கை குறித்து இலங்கை அதிருப்தி

பிரித்தானியாவின் பயண எச்சரிக்கை தொடர்பில் இலங்கை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்வது ஆபத்தானது என அண்மையில் பிரித்தானியா தனது புதிய பயண எச்சரிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தது.

குறிப்பாக தேசிய வாத சக்திகள் மற்றும் பாலியல் வன்முறைகள் போன்றவற்றினால் தமது நாட்டுப் பிரஜைகள் பாதிப்புக்களை எதிர்நோக்கக் கூடுமென இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் பிரித்தானியாவின் இந்த பயண எச்சரிக்கைக்கு அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்த பயண எச்சரிக்கையில் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் இது தொடர்பில் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்திடம் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருத்தமற்ற தருணத்தில், பொருத்தமற்ற விதத்தில் பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் உண்மை நிலைமைக்கு புறம்பான வகையில் இந்த பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரித்தானிய பெண்கள் சிறிய ஆயுதங்கள் அல்லது தகவல் தொழில்நுட்ப சாதனங்களை எடுத்துச் செல்ல வேண்டுமெனவும் தனியாக அல்லது சிறு குழுக்களாக பெண்கள் செல்லும் போது மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட வேண்டுமெனவும் பயண எச்சரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. குறிப்பாக இவ்வாறான பயண எச்சரிக்கையின் மூலம் இலங்கையர்கள் அனைவரும் பாலியல் குற்றவாளிகளாக பிரித்தானியா சித்திரித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் மற்றுமொரு உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த பயண எச்சரிக்கையை பிரித்தானியா வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். (அ-2)

## மலர் வெளியீடு




சர்வதேச அரியாலை தின நிகழ்வுகள் அண்மையில் அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய அமரர் விஷ்வநாதன் அரங்கில் நடைபெற்றது.

நீண்ட காலமாக புலம்பெயர் நாடுகளில் பிரிந்திருந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஒரே இடத்தில் சந்தித்த இந்நிகழ்வின் போது சர்வதேச அரியாலை தினம் எனும் மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. (அ-9)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாநாடு வடக்கு மாகாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55 ஆவது மாநாடு வடக்கு மாகாணத்தில் நடத்தப்படவுள்ளதாக ஆசிரியர்சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

சம காலத்தில் வடமாகாண ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வினை பெற்றுக் கொள்ளும் நோக்கில் நேற்று திருநெல்வேலியில் உள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஆசிரியர்சங்கத்தில் 55 ஆவது மாநாடு அடுத்த மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இம்முறை வட மாகாணத்தில் அதாவது வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்றார். (அ-6)

# தாண்டிக்குளம் வீதிகள் திருத்தப்படவில்லை

## மீள்குடியேறிய மக்கள் விசனம்

(பூந்தோட்டம்)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினர் வெளியேறிய பின்னர் பொது மக்களிடம் வழங்கப்பட்ட காணிகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை வீதிகள் திருத்தம் செய்யப்படவில்லை என மீள்குடியேறிய மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இராணுவத்தினர் இப்பகுதியில் இருந்து வெளியேறியவுடன் மக்களிடம் காணிகள் ஒப்படைக்கப்பட்டது. அதன்போது வீதிகள் மற்றும் இராணுவ காப்பரண்கள் உட்பட வீடமைப்பு வசதிகளும் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் மீள்குடியேறியோர் தொடர்பில் எவ்வித வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனவும் வீதிகள் புதர் மண்டிக்காணப்படுவதுடன் வேலிகளில் இராணுவத்தினர் பயன்படுத்திய முட்கம்பிகள் காணப்படுவதனால் அவற்றை மக்களால் அகற்றுவதற்கு முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலை தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கியிருந்த போதிலும் எவரும் கண்டு கொள்ளாத நிலையில் வீதிகளையாவது செப்பனிடுவதன் பொருட்டு நகரசபை தலைவருடன் கலந்துரையாடிய நிலையில் நகர சபை தலைவர் நேரடியாக பார்வையிட்டு வீதிகளை செப்பனிடுவதாகவும் பாடசாலைக்கு முன்புறமாக வேலிகளில் காணப்படும் இராணுவத்தினர் பயன்படுத்திய கம்பிகளை அகற்றுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் விசனம் தெரிவித்தனர். (அ-9-266)

# நான்கு நாட்களுக்கு இரு பெண்கள் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

தொண்டை மற்றும் மார்பகப் புற்றுநோய் காரணமாக நான்கு நாட்களுக்கு இரண்டு பெண்கள் வீதம் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது,

வருடம் ஒன்றுக்கு ஆயிரத்து 200 பெண்கள் தொண்டை புற்று நோயினாலும் 2 ஆயிரத்து 400 பெண்கள் மார்பகப் புற்று நோயினாலும் உயிரிழப்பதாக சுகாதர அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புற்றுநோய் இனங்காணப்பட்டபோதும் திருணமான 90 வீதமான பெண்கள் ஆரம்பகட்ட நோய் தாக்கத்தின் போது சிகிச்சைக்கு முகங்கொடுப்பதில்லை.

கொழும்பு நாரஹென்பிட்டி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் பரிசோதனை மத்திய நிலையத்தில் மமோகிராம் மற்றும் பப் பரிசோதனைகளை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்த மாத முதல் வாரத்திலிருந்து மார்பகப் புற்றுநோயை கண்டறிவதற்கான ஸ்கான் பரிசோதனையை இங்கு இலவசமாக செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல் நாட்டின் பல பாகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சுவஉதாண செயற்றிட்டத்தின் மூலமாக தொண்டை மற்றும் மார்பகப் புற்று நோய்களை கண்டறியும் பரிசோதனைகளை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சகல திருணமான பெண்களும் இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை புற்றுநோயை கண்டறியும் பரிசோதனைகளை செய்ய வேண்டும் என அமைச்சு மேலும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (அ-2)

# நெல்லுக்கான உத்தரவாத விலையைப்பெற்று தாருங்கள்

## சிறுபோக விவசாயிகள் துணுக்காய் பிரதேச செயலரிடம் முறைப்பாடு

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனத்தின் கீழ் சிறுபோக நெல் விதைத்த விவசாயிகள் தற்போது அதனை அநியாய விலைக்கு தனியாரிடம் விற்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் ரி.குணபாலனிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த வாரம் துணுக்காய் பிரதேச செயலகத்தில்நடைபெற்றவிவசாயக்குழு கூட்டத்திலேயே கமக்கார அமைப்புக்களினால் முறையிடப்பட்டுள்ளது.

பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் வங்கிகளில் கடன் பெற்று சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் இம்முறை விளைச்சல் வீழ்ச்சியடைந்தமையினாலும் நெல்லுக்கான உத்தரவாத விலையின்மை காரணமாகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வங்கிகளில் எடுத்த கடனை மீள செலுத்த முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஊடாக கட்டுப்பாட்டு விலையில் நெல்லை விற்பனை செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுத்துத்தர வேண்டுமென அவரிடம் கோரிக்கை விடுத்தனர். (அ-3-15)

# ஆஸியில் புகலிடம் கோரும் அதிகளவான சிங்களவர்கள்

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் சிங்களவர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களை விடவும் தற்போது அதிகளவான சிங்களவர்கள் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்களே படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசித்து வந்தனர்.

எனினும் தற்போது தமிழர் அல்லாதோரும் வடக்கு, கிழக்கைச் சாராத தமிழர்களும் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசித்து வருவதாக கடற்படையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மாத ஆரம்பம் முதல் இதுவரையில் சட்டவிரோதமாக இவர்கள் பிரவேசித்து வருவதாக கடற்படையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மாத ஆரம்பம் முதல் இதுவரையில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 214 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் 21 பேர் சிங்களவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸி செல்வோர் தங்களை படகில் செல்ல மறுத்தால் படகுப் பயணம் குறித்து அரசாங்க அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்வதாக அச்சுறுத்தி இந்தப் படகுகளில் சிங்களவர்கள் ஏறிக் கொள்வதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (அ-2)

மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...
4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளன
MACK POWER
கிர்லோஸ்கார் மின்சார பிறப்பாக்கி

குறைந்தபட்ச செலவு
இலகுவாக பராமரித்தல்
விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்
ரூபா 595,000 முதல்....
உடன் அழையுங்கள் 071-4269470 077-7563453
சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
US Tire 1/11 நியமத்தின் பிரகாரம் வெளியேற்றல்
மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10, ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு-08
தொலைபேசி: 011-2691186, தொலைநகல்: 011-2699454
இணையம்: me@mackwoods.com
மின்னஞ்சல்: www.mackwoods.com
(203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் தேர்தலின் பின்னர் ஹக்கீம் எம்முடன் செயற்படுவார்

## நம்பிக்கை உண்டு என்கிறார் அமைச்சர் டிலான்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எத்தனை கட்சிகள் தனித்துப் போட்டியிட்டாலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெறுவது உறுதியாகும். அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் என்ற வகையில் கிழக்குத் தேர்தலின் பின்னர் எம்முடன் இணைந்து செயற்படுவார் என்று நம்புகின்றோம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

எனினும் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் இனவாதத்தை பரப்பி பிரசாரம் செய்து வருகின்றமை குறித்து நான் கவலையடைகின்றேன் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசார நிலைமைகள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை ஐக்கிய தேசியக்கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன தனித்துப் போட்டியிடுவதன் காரணமாக எதிர்க்கட்சிகளின் வாக்குகளே சிதறடிக்கப்படும் சாத்தியம் உள்ளது. அந்த வகையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றியில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சராகவே இருக்கின்றார். அதன்படி கிழக்குத் தேர்தலின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் எம்முடன் இணைந்து செயற்படும். காரணம் காங்கிரஸ் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாகும்.

ஆனால், கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இனவாதத்தை கக்கும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றமை குறித்து நான் கவலையடைகின்றேன். காரணம் என்னைப் பொறுத்தவரை சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என எந்தவொரு இனவாதப் போக்கையும் நான் அனுமதிக்கமாட்டேன்.

எனவே, முஸ்லிம் காங்கிரஸ் வாக்குகளுக்காக இன வாதத்தை கக்குவது கவலையளிக்கின்றது. முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவமானது மிக முக்கிய அமைச்சான நீதியமைச்சை வகித்துக் கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறு இனவாத ரீதியில் பிரசாரம் செய்வது முறையான விடயமல்ல என்றார். (அ-2)

## சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழா

(கிளிநொச்சி)

கலாபூஷணம் திருநகர் நடராசா எழுதிய சிறுகதைத்தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை திருநகர் கிராம முன்னேற்றச்சங்க செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் நடத்தப்படவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நூலின் வெளியீட்டுரையினை காவேரி கலாமன்ற இயக்குநர் வணக்கத்திற்குரிய ரி.எஸ்.யோகசுவாமி, ஆய்வுரையினை பெருமான் கணேசன், திருமதி எம்.எஸ். தேவகௌரி ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ-9)

# சுயலாப அரசியல் தவறுகளுக்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சுயலாப தவறுகள் தொடர்வதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபைக்காக புதிய கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு அரசு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் பிரதேச சபைகளுக்கான புதிய கட்டடங்களையும் அமைத்துக் கொடுத்து வருகின்றது. அந்த வகையில் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபைக்கான கட்டடமும் புதித்தாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னொரு காலகட்டத்தில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையில் இன்று அந்த சூழ்நிலை முற்றாக மாறிவிட்டது. அந்த வகையில் வடபகுதியின் அபிவிருத்தியில் அரசு அக்கறை காட்டிவரும் அதேவேளை, அதற்காக அதிகளவு நிதியினையும் செலவிட்டு வருகின்றது.

இதனிடையே சுயலாப அரசியல்வாதிகள் தமது சுயலாபங்களுக்காக இங்கு அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களை விமர்சித்து மக்களை குழப்பி வரும் நிலையில் அதுதொடர்பில் மக்கள் விழிப்பாக இருப்பதுடன் இவ்வாறான சுயலாப அரசியல் தவறுகள் தொடர்வதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார். (அ-2)

# புதுக்குடியிருப்பு பி.செ.பிரிவில் மீள்குடியமர்வு பதிவு நடவடிக்கை

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிழக்கு, மல்லிகைத்தீவு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வசித்து இடம்பெயர்ந்து பின் தற்போது உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசித்து வரும் புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதிக் குடும்பங்கள் எதிர்வரும் 22 ஆம் திகதியும் எதிர்வரும் 23 ஆம் திகதி மல்லிகைத்தீவு கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட குடும்பங்களும் காலை 9 மணிக்கு மு/கைவேலி கணேசா வித்தியாலயத்திற்கு சமுகம் தரும்படி முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

வரும்போது தாங்கள் தற்போது வசிக்கும் கிராம சேவகர் பிரிவில் இருந்து பதிவுகளை நீக்கிய சான்றிதழ் மற்றும் தேவையான ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கும்படி அவர் கேட்டுள்ளார்.

(அ-3-15)

# 6 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில்வழங்குமாறு கோரிக்கை

## பட்டதாரிகள் சங்கப் பேச்சாளர் தெரிவிப்பு

தொழில்வாய்ப்பற்ற சுமார் 6 ஆயிரம் பட்டதாரிகளுக்கு புதிய சுற்று நிருபமொன்றை விடுப்பதன்மூலம் தொழில் வழங்குமாறு ஜனாதிபதியை தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

2010,2011 ஆம் ஆண்டுகளில் பட்டதாரியானவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் கூறியிருந்தார். ஆனால், அரசாங்கத்தினால் வழங்கப்படும் தொழில்வாய்ப்பு கிடைக்கவில்லை என மேற்படி சங்கத்தின் பேச்சாளர் தம்மிக முனசிங்க கூறியுள்ளார்.

ஜனாதிபதி இவ்வாறு கூறியதன் பின்னர் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் எதிர்பார்ப்புக்களை கொண்டிருந்தனர். இவ்விடயம் உறுதிப்படுத்தப்படுவதற்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். புதிய ஆட்சேர்ப்புக்காக புதிய சுற்றுநிருபமொன்றை வெளியிடுமாறு அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம் என தம்மிக முனசிங்க கூறினார். (அ-2)

# தபால் கட்டண உயர்வு குறித்து தீர்மானம் இல்லை

(கொழும்பு)

தபால் கட்டணங்களை உயர்த்துவது குறித்து இதுவரை எதுவித தீர்மானங்களும் எடுக்கவில்லை என தபால் சேவை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் தான் பதவி ஏற்றது தொடக்கம் தபால் கட்டண உயர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தபால் கட்டணம் உயரும் என அண்மையில் ஊடகங்களில் வெளியான செய்தியில் உண்மை இல்லை என அவர் கூறியுள்ளார். (அ-2)





உங்கள் முன்னேற்றத்தின் ஊண்டுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

முறைப்பாடு மற்றும் முன்மொழிவுகளுக்கு மேலே உள்ள தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளுங்கள்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்

www.nationstrust.com
Nations Trust Bank PLC - PQ 118

(சி-792)

Nations Trust Bank
Nations Leasing


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் நோக்கம் அறிவு மட்டுமல்ல ; செயல் தான்.

– தாமஸ் ஹக்ஸ்லி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மக்களின் வாக்குகளை பெறுவதற்கு போலிப் பிரசாரத்தில் ரவூப் ஹக்கீம்

## ஏ.எச்.எம்.அஸ்வர் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த அரசாங்கம் பள்ளிவாசல்களை உடைப்பதாக தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக பொய்ப்பிரசாரம் செய்துவரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்நாட்டில் எப்பகுதியிலாவது ஒரு பள்ளிவாசலாவது உடைக்கப்பட்டமையை காட்டமுடியுமா என தான் அவருக்கு சவால் விடுவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

புல்மோட்டையில் நடைபெற்ற ஐ.ம.சு.முவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றும்போதே அஸ்வர் எம்.பி. இச்சவாலை விட்டுள்ளார்.

அத்துடன் புலிகளின் குரலாக இன்றும் செயற்பட்டு வருவதாக முஸ்லிம் மக்களால் நம்பப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ள மறைமுகமான இரகசிய உடன்பாடானது முஸ்லிம்கள் மக்களிடையே பாரிய எதிர்ப்பலையையும் அதிருப்தியையும் உருவாக்கியுள்ளது. இது புலம்பெயர் தமிழர்களினதும் புலி ஆதரவாளர்களினதும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமையவுள்ள சூழ்ச்சிக்கு வடக்கு கிழக்கு முஸ்லிம்மக்களை அடகுவைப்பதற்குச் சமனாகும். வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் புலி ஆதரவு சர்வதேச சதித்திட்டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் துணை போவதுடன் முஸ்லிம்களுக்கு துரோகம் இழைக்கும் நய வஞ்சகச் செயலுமாகும்.

உண்மையில் நாட்டில் உள்ள சில பள்ளிவாசல்கள் மீதான குழப்பத்தின் பின்னணியில் ஐக்கியதேசியக்கட்சியே உள்ளமை தெளிவாகியுள்ளது.

முடிந்தால் மு.கா. தலைவர் உடைக்கப்பட்டதாக கூறப்படும் ஒரு பள்ளிவாசலை தெரிவிக்கட்டும் எனவும் அஸ்வர் எம்.பி. சவால்விடுத்தார்.

அரசை விமர்சிக்கும் ஹக்கீம் ஏன் அதே அரசில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் எனவும் அவர் கேள்வியெ முப்பினார்.

அண்மைக்காலமாக மு.கா. தலைவரது செயற்பாடுகள் காரணமாக அக்கட்சிக்கு இருந்த சொற்ப ஆதரவும் இல்லாது வருகிறது. விரைவில் மு.காவிற்கு மூடுவிழா செய்யவேண்டிய நிலையேற்படவுள்ளது. அதற்குத் தலைவரே வழி சமைத்து வருகிறார். கொடிய விஷப் பாம்பு கக்கும் விஷம் போன்ற அவரது இனத்துவேசக் கருத்துக்கள் நாட்டில் இன ஒற்றுமையை சீர்குலைப்பதாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

விரைவில் மு.காவிலுள்ள முஸ்லிம்கள் முன்னரைப்போன்று தம்மை தேசியக் கட்சியான ஸ்ரீ.முகாவில் முழுமையாக இணைக்கவுள்ளதாகவும் அஸ்வர் எம்.பி தெரிவித்தார். (அ-2)

# பட்டதாரி பயிலுநர்களின் உழைப்பைப் பயன்படுத்துங்கள்

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழுங்கும் கட்டாயத்தின் கீழ் நாடு பூராகவும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எந்தவித திட்டமிடலும் ஒழுங்கு படுத்தலும் இல்லாமல் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்க வேண்டும் என்ற நெருக்கீட்டின் அடிப்படையில் வழ்ங்கப்பட்ட இந்த நியமனத்தால், பிரதேச செயலகங்கள் தேவைக்கு அதிகமான மனிதவளத்தைப் பெற்றுள்ளன என்று கூறமுடியும்.

எனினும் பட்டதாரி பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்படுகின்றதா? அவர்களின் உழைப்பு முழுமையாகப் பெறப்படுகின்றதா? என்ற கேள்விக்குத் திருப்தியான பதிலை பெறமுடியாதென்றே கூறவேண்டும்.

பயிற்சி என்ற அடிப்படையில் பட்டதாரி பயிலுநர்களை கிராம உத்தியோகத்தர்களுடன் இணைத்துவிடுதல் என்பது பயிற்சியின் ஓர் அங்கமாக இருக்க வேண்டுமே அன்றி அதுவே முழுமையானதாக இருந்தால் எதிர்காலத்தில் பட்டதாரி பயிலுநர்களிடமிருந்து முழுமையான உழைப்பை –பங்களிப்பை பெற முடியாது என்பது உண்மை.

எனவே பிரதேச செயலகங்களில் நிறைந்து போயுள்ள பட்டதாரி பயிலுநர்களை பயன்படுத்தி ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் தமக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் தத்தம் பிரதேச எல்லைக்குள் ஏற்கெனவே இனங்கண்ட பிரச்சினைகளுக்கு தீர்வினை ஏற் படுத்தல், இருக்கக் கூடிய பிரச்சினைகளை இனம் காணுதல் என்றவாறு பட்டதாரி பயிலுநர்களிடமிருந்து சேவையைப் பெற முடியும்.

இதன் மூலம் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக்கு அனுப்பிவைத்தல், வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் மாற்று வலுவுள்ளோரை இனம் கண்டு அவர்களை சமூக மயப்படுத்தல், அந்தந்த பிரதேசங்களில் இதுவரை பயன்படுத்தப்படாத வளங்களை இனம் கண்டு அவற்றைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் கிராம மட்டங்களில் சமூக குழுக்களை உருவாக்கி கூட்டு முயற்சியை ஏற்படுத்தல் என்றவாறு பல்வேறு பணிகளை மேற்கொள்ள முடியும்.

இது தவிர பட்டதாரி பயிலுநர்களுக்கு தேவையான தலைமைத்துவ, முகாமைத்துவ தொடர்பாடல் பயிற்சிகளை மாலை நேரங்களில் வழுங்குவதும் அவசியமாகும்.

இதன் மூலம் ஆரோக்கியமான–முழுமையான–தரமான நிர்வாகப் பணியாளர்களை உருவாக்க முடியும்.

இதைவிடுத்து நியமனத்தை வழங்கிய அரசே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளட்டும் என்று இருந்தால், பட்டதாரிகள் என்ற உன்னதமான மனித வளம் வீணாகிப் போகும்.

இந்தத் துயரம் எதிர்கால நிர்வாக ஒழுங்குபடுத்தல்களுக்கு தடையாகவே இருக்கும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

# பொது சுகாதார பரிசோதகர் குழு தனியார் வைத்தியசாலைகளுக்கு விஜயம்

## சுகாதார நிலைமைகள் ஆராயப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் எல்லக்குட்பட்ட யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ளடங்கும் ஒன்பது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.ஏ.ஞானசோதியின் தலைமையில் பிரதம பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவானது மேற்படி தனியார் வைத்திய நிலையங்களுக்குச் சென்று அவற்றின் அடிப்படைச் சுகாதார நிலைமைகள் மற்றும் காவறைகளின் ஏற்பாட்டு வசதிகள் திண்மக்கழிவு அகற்றுதல், திரவக்கழிவு பரிகரிப்பு முறை தொற்று நீக்கும் செயல் பாடுகள் மற்றும் சுற்றாடல் சுகாதாரம் என்பன பற்றி கவனயீர்ப்புச் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் குறித்த வைத்திய நிலையங்களுக்குச் சென்று சிகிச்சை பெறும் நோயாளர்களின் நோய் நிலை பற்றிய தொற்று நோய்த் தடுப்புச் செயற்பாடுகளில் அவர்களின் பொறுப்புள்ள விடயமான தொற்று நோய் பற்றிய பதிவேடு பேணுதல் (தொற்று நோய் பற்றிய அறிவித்தல் படிவம் H-514) பூர்த்தி செய்து யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தல்களும் வழங்கப்படுகின்றன.

மேற்படி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைமுறை படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

# டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவிலுள்ள ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இப்பிரதேசத்தில் உள்ள இப்பாடசாலை சகல வளங்களையும் இழந்த நிலையிலும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக வகுப்பறைத் தொகுதிகளில் பாடசாலை இயங்கி வருகின்றது.

இங்கு கொடிகாமப் பொலிஸாரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து சிரமதான மூலம் பாடசாலை வளாகத்தை துப்புரவு செய்யும் நிகழ்வில் பிரதேச குடியிருப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (அ-3-29)

# அரச அதிகாரிகளுக்கு எதிராக நிதி தொடர்பான முறைப்பாடுகள்

அரச துறையில் பணியாற்றும் அதிகாரிகள் மேற்கொண்ட நிதிமுறை கேடுகள் தொடர்பில் 4ஆயிரத்து 14 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை அறிக்கையை ஜனாதிபதியின் விசேட விசாரணைக்குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளது.

கடந்த இரண்டரை வருட காலப் பகுதியில் இது தொடர்பான முறைப்பாடுகள் பொதுமக்களிடம் இருந்து கிடைத்துள்ளன. எனினும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு அமைய ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

இதேவேளை கடந்த 16ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திஸாநாயக்க குறித்த ஜனாதிபதி விசாரணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்துவதாக குற்றம் சுமத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஸ்ரீமனோன்மணி அம்பாள் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரக்குளம் தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு சமுத்திரத்தீர்த்தமும் நடைபெறும்.

மஹோற்சவ காலங்களில் தினமும் இரவு 7. 30 மணி தொடக்கம் 8.30 மணிவரை இந்து கலாசார அனுசரணையுடன் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளதாக தேவஸ்தான சபை அறிவித்துள்ளது. (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## சிகரத்தை எட்ட சிரமப்படு!



உண்மை என்னும் பாதையில் இருந்து அணுவளவும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனம் செலுத்துங்கள்.

அமைதி என்னும் துறைமுகைத்தை அடைவத ற்கு முன் பெரும் புயல்களையும் அலைகளையும் சமாளித்துத்தான் ஆகவேண்டும்.

கடுமையான சோதனைகளை எதிர்கொள்ளாமல் மனிதன் சிகரத்தை எட்டிப்பிடிக்கமுடியாது.

மற்றவர்களுக்கு நன்மை செய்பவன் தர்மவழியில் செல்கிறான் தீமை செய்பவன் பாவவழியைத் தேர்ந்தெடுக்கிறான். அதற்கான பலனை அவரவர் பெறுவது உறுதி.

வாழ்வில் ஒவ்வொரு நாளும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். இலட்சியத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். அதற்கு மாறான எதைப்பற்றியும் சிந்திக்காதீர்கள்.

எப்போதும் நேர்மையைப் பின்பற்றுங்கள். விடாமுயற்சியுடன் போராடுங்கள். உண்மையாக உழையுங்கள். தன்னம்பிக்கையைக் கைவிடாதீர்கள். இலட்சியத்தை நிச்சயம் அடைந்து விடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியின் சில துளிகள்...

## கற்கோவளம் உதயதாரகை வி.க. உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில்

### இமையாணன், சென்.பீற்றேர்ஸ் அணிகள் வெற்றி



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் சிவானந்தா B அணியை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது. இதில் 4:0 என்ற கோல்கணக்கில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. அடுத்த போட்டியில் சுடர் ஒளி விளையாட்டு கழகத்தை எதிர்த்து சென்.பீற்றேர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது. இதில் 1:0 என்ற கோல்கணக்கில் சென். பீற்றேர்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. (3)




## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்ததாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

இதில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்றைய தினம் நடைபெறும் ஆட்டத்தில் பி.ப.3.30 மணிக்கு டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (3)

## மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டு கழகம் மன்னார் மாவட்டத்தின் கிரிக்கெட் வளர்ச்சி கருதி தொடர்ந்து இரண்டாவது முறையாக நடத்தும் பிரமாண்டமான மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

மொத்தமாக 40 போட்டிகளை கொண்ட இப்போட்டியில் மன்னார் மாவட்டத்தின் முன்னணி அணிகளான ஸ்டார் ஈகிள், சென். விக்டறிஸ், சென்.அன்ரனிஸ், சென். ஜோசப், இந்து முன்னணி, யங்ஸ்டார், ஏசியன் மற்றும் கிறீன்பீல்ட் ஆகிய அணிகளும் கிளிநொச்சி மாவட்ட அணியும் இதில் களமிறங்கவுள்ளன.



அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பளுதூக்குதல் போட்டியில் 77 கிலோ எடை பிரிவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தெ.இந்திரகுமார் இடம்பெற்றுள்ளார்.





புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டு கழகத்தின் 50 ஆவது ஆண்டு பொன் விழாவை முன்னிட்டு அண்மையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட காட்சிப் போட்டியின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 67 ஓட்டங்களால் பஸ்னாகிரவை வயம்ப யுனைட்டட் வென்றது




(கொழும்பு) சிறிலங்கா பிரிமியர் லீக் தொடரில் நேற்றைய முதற்போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி வெற்றி பெற்றுள்ளது.

பஸ்னாகிர கிரிக்கெட் அணிக்கெதிராக நேற்றைய போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கண்டி பல்லேகல மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வயம்ப யுனைட்டட் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வயம்ப யுனைட்டட் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது.

மிகச் சிறப்பான முதலாவது விக்கெட் இணைப்பாட்டமான 47 ஓட்டங்களை 3.4 ஓவர்களில் பகிர்ந்த வயம்ப அணி, இறுதி நேரத்தில் பெருமளவில் ஓட்டங்களைக் குவிக்கத் தவறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் வயம்ப யுனைட்டட் அணி சார்பாக கம்ரன் அக்மல் 65 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.பந்துவீச்சில் பஸ்னாகிர கிரிக்கெட் அணி




சார்பாக சார்ள்ஸ் லாங்வெல்ற் 3 விக்கெட்டுக்களையும், சச்சித்திர சேரசிங்க, தம்மிக்க பிரசாத், ஜீவன் மெண்டிஸ், திலகரட்ண டில்சான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

166 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஸ்னாகிர கிரிக்கெட் அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களையே பெற்று 67 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்த அவ்வணியால் வெற்றி இலக்கை அடைவது சிரமமானது.

துடுப்பாட்டத்தில் பஸ்னாகிர கிரிக்கெட் அணி சார்பாக றில்லி றொசோவ் 20 ஓட்டங்களையும், திமுத் கருணாரட்ண 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வயம்ப யுனைட்ட் அணி சார்பாக கௌஷல்ய வீரரத்ன 3 விக்கெட்டுக்களையும், அகில தனஞ்சய 2 விக்கெட்டுக்களையும், இசுரு உதான, அஷார் மஹ்மட், சத்துரங்க குமார, மொஹமட் ஹபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக கம்ரான் அக்மல் தெரிவானார்.

## தமிழீழம் அழியவில்லை...

மக்களுக்கான விடுதலையில் ஐ.நாவால் எதுவும் செய்ய முடியாது.

ஆனால் இந்தியாவும் அமெரிக்காவும் நினைத்தால் தமிழ் மக்களுக்கான தீர்வை உடனே கொண்டு வரலாம் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரபாகரன் சிறந்த போராளி.மாவீரன். ஆனால்; அவர் ஓர் நல்ல அரசியல்வாதியல்ல. அவர் தன் மண் மீதும் மக்கள் மீதும் பாசம் கொண்டவர்.

ராஜபக்ஷ இனவெறியர்.அவர் ஒருபோதும் தமிழ் மக்களுக்கான தீர்வை ஏற்படுத்தும் நன்மை செய்யமாட்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளியாகும் சஞ்சிகையொன்றிற்கு வழங்கிய நேர்காணலிலே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.(ந-11)

## தமிழீழம்...

ஏற்கெனவே இது தொடர்பில் தேர்தல் செயலகம் ஆராய்ந்து வந்துள்ளது.

புலி மற்றும் நாய் உருவங்களை கட்சி சின்னமாகப் பயன்படுத்தக் கூடாது என அண்மையில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தடை உத்தரவிட்டிருந்தார்.

இதன் அடுத்த ஒரு திட்டமாகவே தமிழீழம் என்ற வார்த்தைகளுக்கும் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றமை தெளிவாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

தமிழ் அரசியல் கட்சி பிரமுகர்கள் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் தமிழீழம் என்ற சொல் பரவலாகப் பேசப்பட்டு பலம் மிக்க சொற் பிரயோகமாக பிரதிபலிக்கின்றது.

இந்த நிலைமையை இலங்கை அரசு, தனது நீடித்த சமாதான முயற்சிக்கு உறுத்தலாக அமையக்கூடாது எனக் கருதியே இச் சொல்லை தடை செய்ய முயன்று வருகின்றது.

ரெலோ (தமிழீழ விடுதலை இயக்கம்) கட்சி மட்டுமே தற்போது தமிழீழம் என்ற சொல்லை தனது கட்சிப் பெயரில் பயன்படுத்தி வருகின்றது.

இது குறித்து ரெலோ பேச்சாளர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்,

தமிழீழம் என்ற சொல்லை தடுக்கும் நோக்கில் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்படுகின்றது.

இது எமது கட்சியின் பெயரைப் பாதிப்பது தேவையற்ற விடயமே, ஏனெனில் நாம் தமிழீழம் கோரிக்கையான தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை.

எமது கட்சி ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கத்தையே வலியுறுத்தி வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

தற்போது இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளில் ரெலோ மட்டும் தான் தமிழீழம் என்ற சொல்லைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

# அரசு-கூட்டமைப்பு பேச்சுக்கு தெரிவுக்குழுதான் சரியான வழி

## தென்னாபிரிக்கா ஆலோசனை

இலங்கை வந்து அரச தரப்புடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் பேச்சுக்களை நடத்தியிருக்கும் தென்னாபிரிக்கக் குழு,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்விலே ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவதுதான் வழியாகத் தெரிகிறது என்று கூறியுள்ளது.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் கடந்த எட்டு மாதங்களாக தடைப்பட்டுள்ள நிலையிலேயே தென்னாபிரிக்காவின் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன.

தடைப்பட்டுள்ள இந்தப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்க தென்னாபிரிக்கா அனுசரணையாளராக இருக்க முன்வந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர்.

ஆனால் இலங்கை விடயத்தில் மத்தியஸ்தராகவோ அல்லது அனுசரணையாளராகவோ பங்காற்ற தாங்கள் முயலவில்லை என்று தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான துணை அமைச்சர் இப்ராஹிம் பிபிசியிடம் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்க குழுவினர் அரச தரப்பையும், கூட்டமைப்பினரையும் சந்தித்துப் பேசியுள்ளனர். அதன் போது இரு தரப்புமே தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதை தாங்கள் அறிந்து கொண்டதாக இப்ராஹிம் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பினரும் வரவேண்டும் என்றும், அதன் மூலமே தீர்வு காண முடியும் எனவும் அரசு கூறுகிறது.

கூட்டமைப்போ அரசுக்கும் தமக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்ட பிறகு தெரிவுக்குழுவில் பங்கேற்பது குறித்து முடிபு செய்யலாம் என்று கூறுகிறது.

இதன் காரணமாகவே பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. அரச தரப்பிடம் பேசிய பிறகு இரண்டாவது முறையாக கூட்டமைப்பினரை தாங்கள் சந்தித்து பேசியபோது அவர்கள் தெரிவுக்குழுவில் பங்கேற்பது என்கிற யோசனையை பரிசீலனை செய்வது போலத் தோன்றுகிறது என தென்னாபிரிக்க அமைச்சர் இப்ராஹிம் தெரிவித்தார். (ந-11)

# நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் லக்ஸ்மனுக்கு பதிலாக பத்திரிநாத்



இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் வீரர் லக்ஸ்மன் ஓய்வுபெற்ற நிலையில் நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் தமிழக வீரர் சுப்பிரமணியம் பத்திரிநாத் சேர்க்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட், 2 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

இதனிடையே நியூசிலாந்துடன் விளையாடும் இந்திய அணியில் வி.வி.எஸ். லக்ஸ்மன் இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக வி.வி.எஸ். லக்ஸ்மன் நேற்றுமுன்தினம் திடீரென அறிவித்தார். இதனால் இந்திய கிரிக்கெட் சபை அதிர்ச்சியடைந்தது.

இந்நிலையில் லக்ஸ்மனுக்கு பதிலாக இளம் வீரர் பத்ரிநாத் சேர்க்கப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை நேற்று அறிவித்துள்ளது.நியூசிலாந்து அணிக்கெதிராக முதல் டெஸ்ட் போட்டி வரும் 23-ம் திகதி ஹைதராபாத்தில் நடைபெறவுள்ளது.லக்ஸ்மனின் ஓய்வு இந்திய கிரிக்கெட் சபை மற்றும் இரசிகர்களிடேயே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## புத்தரின் புனித...

இதனடிப்படையில் அவை நேற்று இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், தமிழகத்திலுள்ள வைகோ உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள், அரசியல்வாதிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வழங்குவதை தடை செய்யுமாறு இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை கடிதமொன்றை கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இப் புனித சின்னங்களை பொறுப்பேற்றார்.

இந்திய விமான படையின் விசேட விமானம் ஒன்றின் மூலம் இச் சின்னங்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்திய கலாசார அமைச்சர் குமாரி செல்ஜா இவற்றைக் கொண்டுவந்தார். 1978ஆம் ஆண்டுக்குப் பின் இவை இலங்கைக்கு கொண்டுவரப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

பண்டாரநாயக்க விமான நிலையத்தில் இப் புனித சின்னங்கள் கொண்டு வரப்பட்டவுடன் மகா நாயக்க தேரர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் பிரித் ஓதினர்.

இப் புனித சின்னங்களைக் கொண்டு வந்தமைக்கான இந்திய கலாசார அமைச்சர் செல்யாவுக்கு மகிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவத்தார்.

விமான நிலையத்திலிருந்து களனி மாணல்வத்த விகாரைக்கு இச் சின்னங்கள் கொண்டு செல்லப்பட்டன. செப்ரம்பர் 4ஆம் திகதி வரை அவை அங்கு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ந-11)

## ஐ.தே.கவின்...

ராஜகருண, கெக்கிராவ பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர், இபலோகம பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சுகத் ஹேரத் ஆகியோரே இவ்வாறு இணைந்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணியின் மிகிந்தலை அமைப்பாளர், ரோஹசபுஷ்ப குமார உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் நால்வரும் ஆளும் கட்சியுடன் இணைந்துள்ளதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் சல்காது விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.ம.சு. கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது இவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-11)

## எமது வேட்பாளர்...

வருகின்றனர்.

ராஜாங்கனையில் ஒரு பிரதேச சபை உறுப்பினர் ஆளும் கூட்டமைப்பில் இணைந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அங்கு எமது கட்சிக்கு ஒரு உறுப்பினர்.

இதேபோன்று நெனஸ, தலாவ போன்ற பகுதிகளில் உள்ள பிரதேச சபை உறுப்பினர்களும் இந்த முறையும் ஜே.வி.பியினுடன் இருந்து வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

எனவே தோல்வியடையும் நிலைமையை முன்கூட்டியே அறிந்து வைத்துக் கொண்டு அரசாங்கம் இவ்வாறான பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அரசாங்கம் தேர்தல் வரும் போது போலியான அறைகூவல்களையும் சூளுரைகளையும் வெளியிட்டு வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க கூறியுள்ளார். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்காவின்...

நடத்தியிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் தென்னாபிரிக்காவின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வது பயனுள்ளதாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்னாபிரிக்காவிலும் இவ்வாறான இனப்பிரச்சினை இடம்பெற்று அதற்கு தீர்வு காணப்பட்டுள்ளமையினால் அந்த நாட்டின் ஒத்துழைப்பு காத்திரமானதாக அமையும் என சுரேஸ் பிரேமச்சந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் விரைவில் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக தென்னாபிரிக்கா அண்மையில் அறிவித்திருந்தது.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என தென்னாபிரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் தெரிவித்திருந்தார்.

அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட தென்னாபிரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் தலைமையிலான உயர்மட்டக் குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தென்னாபிரிக்கா வருமாறும் அழைப்பு விடுத்ததாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## இலங்கைத் தமிழர்...

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிதியில் றேசன் பொருட்கள், ஆடைகள், சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் தற்காலிக மருத்துவமனைகள் நிறுவப்பட்டன. மருந்துகள் வழங்கப்பட்டன.

நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை கண்டறிந்து செயலிழக்கச் செய்ய இந்தியாவிலிருந்து ஏழு குழுக்கள் அனுப்பப்பட்டன.

உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தோருக்காக 10 ஆயிரத்து 400 மெற்றிக் தொன்னுக்கும் மேற்பட்ட தங்குமிட பொருட்கள், வேளாண் உற்பத்தியை தொடங்குவதற்கு தேவைப்படும் 95 ஆயிரம் பொருட்கள், 500 டிரக்டர்களும் வழங்கப்பட்டன.

இவை தவிர வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களில் பயணிகள் பேருந்து சேவைக்கான 55 பேருந்துகளை இந்தியா இலவசமாக வழங்கியிருந்தது.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணம், வவுனியாவில் செயற்கை கை, கால் உறுப்புக்களை பொருத்துவதற்காக இந்திய நிபுணர்கள் ஒருமாத முகாம் நடத்தினர்.

போரின்போது பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை சரிசெய்ய 4 இலட்சம் சீமெந்து மூடைகள் இலவசமாக வழங்கப்பட்டது.

மறுவாழ்வு, மீள்குடியேற்ற பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்காக நடப்பாண்டில் ரூபாய் 290 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு புகையிரதப் பாதை அமைக்கும் பணிகளுக்காக 80 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு இந்தியா கடனாக வழங்கியுள்ளது.

இந்த நிதி அனைத்தும் சரியான முறையில் செலவிடப்படுகின்றதா என்பதை கண்காணிக்க இரு நாட்டு அரசுகளின் சார்பில் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தெரிவித்துள்ளார். (ந-11)

## டெசோ தீர்மான...

தமிழர்கள் மறுவாழ்வுக்காக மத்திய அரசு தேவையான உதவிகளை செய்து வருகிறது என அவர் கூறினார். (ந-11)


**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா**
**ஆலோசனை சட்டரீதியாக**
**PR பெறக் கடிய வாய்ப்புக்களோடு**

படிமுறையான விளக்கங்களிற்கும்
ஆலோசனைகளிற்கும்
விரைந்து வாருங்கள்

கம்பனிப் பதிவுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட
பகிரங்கத்தன்மையான நிறுவனத்திடம்

புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்** (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016
0212219514



(C-793)

**மணல் விற்பனைக்குண்டு**

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர் - 19,500/-**

தொடர்புகளுக்கு
ரமேஸ்
0722694462

(241)

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கி வரும் The K K Promotion Express இற்கு ஆண்/பெண் வேலையாட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
கல்வித்தகைமை: சாதாரண தரம்
சம்பளம் : 20000 - 40000 வரை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 071 92 92 922
(242) Field work

**MyWay இன் முக்கிய அறிவித்தல்**

இரண்டு வார விடுமுறைக்குப்பின் அலுவலகமும் வகுப்புக்களும் மீண்டும் 29.08.2012 இலிருந்து ஆரம்பிக்கும் என்பதையும் கடந்த 15.05.2012 இற்கு பின்பாக பயிற்சிக்கு பதிவுசெய்தோர் பயிற்சியிலிருந்து விலக விரும்பின் எந்த நிபந்தனையும் இன்றி பணத்தினை மீள பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

(அ-795)

MyWay, 182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 31.08.2011 அன்று சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்
**அமரர் சபாபதி நற்குணம்**





(235)

ஆண்டு ஒன்று ஆனாலும் அகலாது உம் நினைவு
காலமோடிப்போனாலும் மறைந்திடுமோ உம் அன்பு
சிரித்து வாழ்ந்த காலமெல்லாம் சிறகடித்துப் பறந்ததுவோ
உம் சிரித்த முகம் எம்மனதில் நிலையாய் தெரிகிறது
பிறப்புண்டேல் இறப்பு நியதி இருப்பினும் ஏற்க மறுக்கிறது மனம்
உமைக் காணத்துடிக்கிறது நிதம்

கோம்பு,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org